
www.tamilarangam.net

# பொங்கும் தமிழமுது

ஐப்பசி 1985 விலை ரூபா 1-50

யாழ் நூலகம்
காமராசர் சாலை
காந்தி புதூர்
பாளையம் (அஞ்)
கோவை-15.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமலையில் திரிபடைகள்

உமாப்பிரபா

திருமலைத் தெருக்களிலே
திரியாகிக்
கரியாகிப்போன
உடல்களின்மேல் — சில
கவச வண்டிகளின்
களிநடனம் ...

சிந்தியோடுகின்ற
சிவந்த குருதியின்மேல்
முந்தி ஓடுகின்ற
கண்ணீரலைகளில்
கவிழ்ந்துபோயிருக்கும் — பல
கண்கள் ...

அழிந்துபோன உடமைகளால்
இழந்துபோன உயிர்களினால்
அலைந்துபோய்
அகதிகளாகியவர்...
இன்று
அரச கூலிகளின்
அசுர வேலைகளால்
மலிந்துபோன
தீக் கொழுந்துகளில்
மறைந்துகொண்டு
இருக்கின்றனர்...

அந்த
திருமலையின்
திருத்தலங்களிலும்...
பலிக்களங்களிலும்...
எரிபடையாய் எழுந்துவரும்
திரிபடையும்
எங்கள்
திருமலையில் குடிகொண்டு
இன்று —
நரிப்படையாய் —
நாறிய மண்டை ஓட்டில்
அமுதம் அருந்தி
ஆனந்தக் கூத்தாடுகின்றது...

குருதி வெள்ளத்துள்
புதைந்துகொண்டிருக்கும்,
பிணங்களின் மேல்
பிறந்து கொண்டிருக்கும்
புழுக்களிலும் — ஒரு
புலம்பல் கேட்கிறது.

கற்களே
கரியாகிக்கொண்டிருக்கும்
தீயில்
மக்களின்
மரணிப்பு ஓலங்கள்
கட்டலைகளுடன் — அங்கே
கலந்துகொண்டிருக்கின்றது.

திருமலையில்
தீயின் திரைமறைவில்
எமது —
தாயின் வயிறு
இன்னும்
எத்தனை நாள்தான்
எரிந்துகொண்டிருக்கும்.

தீப்பற்றி எரிகின்ற
தீவிலுள்ள
எமது பேனாவும் — தன்
கவியின் வரிகளில்
கரிகளைத்தான் கக்குகின்றது

அதனால் அக்கவியும்
எரிகிறது.

குருதிப் பூக்களில்
பூபாளமிசைத்து
வாசல்களெங்கும்
புதிய கோலமிடும்
நாள்வரைக்கும்
கவி வரிகள்
கரிகளைத்தான்
கக்குமிங்கே!

★

பொங்கும் தமிழமுது

கிண்ணம் 3 ● துளி 7

# இன்றைய சூழலில் செயல்படல் பற்றிய சில எண்ணங்கள் . . .

ஒரு மரம் இருந்தது. பசுமையான மரம். பருவங்கள் மாறிய போது கொடிய வெயில் வந்தது. அனல்காற்று வீசியது; மரம் வாடிற்று. நீரூற்றிப் பயனில்லை. களத்தில் போரிட்டு மடிந்த வீரத் தமிழ்ச் செம்மல்களின் குருதியும், தமிழீழத்தின் காடுகளில் திரிந்து சிந்திய வியர்வையும், சிறிலங்காவின் வதைக்கூடங்களில் புண்ணாகிய இளம் தமிழ் மேனிகளில் இருந்து கசிந்த நிணநீருமே அதைக் காக்கும் உரமாயின. என்றோ ஒருநாள் அவ்விருட்சம் தளிர்த்துக் கிளை பரப்பிப் பூத்துக் குலுங்கும் என்ற இன்கனவு நெஞ்சில் பசுமையாக இருக்கும்போதே நம்பிக்கையோடு அதனடியில் போராடி மாண்டனர் எம்மண்ணின் மைந்தர் பலர்.

தமிழீழ விருட்சத்தின் அடியில் சிந்திய வியர்வையிலும் குருதியிலும் கண்ணீரிலும் தோய்ந்தெழும் எண்ணங்களின் பதிவுகளே உறுதி தந்து உணர்வூட்டிச் செயற்படுத்தும். குறுகிய வட்டங்களுட் சிக்குண்டு தனிநல மையங்களில் இறுகி எம் கவனத்தின் திசை தடுமாறும் ஒவ்வொரு கணமும் எம்மண்ணில் காலனின் காலதிர அவலக்குரல் எழும்பும் கணங்களே.

பல்வேறு மனிதர்களின் பல்வேறு வகைப்பட்ட செயற்பாடுகளின் கூட்டுப் பரிமாற்றங்களினாலேயே சமூகம் உருவாகி இயங்கிச் செல்கிறது. நோய்தீர்க்க வைத்தியனும், உணவு தர உழவனும் கல்வியூட்ட ஆசானும் என்று இப்படி எத்தனையோ வகை மனிதர்கள் சமூகம் இயங்கப் பரஸ்பரம் செயல்பட வேண்டியுள்ளது. சுமூகமான நிலையிலுள்ள ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகம் இயங்கவே இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட திறன்களின் செயற்பாடுகளும் பரஸ்பரப் பரிமாற்றமும் அவசியமாயின் வாடிவதங்கும் எம் தமிழீழ விருட்சத்தைக் காப்பாற்றித் தளிர்க்கச் செய்யும் நெறிமுறையின் தன்மை என்ன என்பதைச் சற்று நாம் நிதானிக்க வேண்டும். இல்லையெனில் நாம் எம்மைச் சுற்றி வட்டம் போட்டு அதனுள்ளேயே அமிழ்ந்து கையாலாகாப் பார்வையாளரர்கி விடுவோம்.

பிரச்சனையற்றிருக்கும் ஒரு சமூகம் சமூகமாக இருப்பதற்குப் பல்வேறு திறன்களின் செயற்பாடு தேவையாயின் பயங்கரமான நெருக்கடிகளினூடு இயங்கிச் செல்ல வேண்டிய ஒரு சமூகத்திற்குப் பல்வகைத் திறன்களின் பரஸ்பரக் கூட்டுச் செயற்பாடுகளின் உச்சப் பயன்பாடு இன்றியமையாததாகிறது. காட்டுப்பகுதிக் கிராமங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு மேய்ச்சலுக்காகவும் விற்பனைக்காகவும் காட்டுவழிகளினூடு மாடுகளை கொண்டு செல்லும் ஒருவனுடைய அறிவு போராட்டக் காலத்தில் கெரில்லாக்கள் எதிரிக்குத் தெரியாமல் நகரவும், வெற்றிகரமாகப் பின்வாங்கவும் பயன்படுகிறது. ஒவ்வொரு சமூகத்தின் தன்மைக்கேற்பவும் தேவைகளுக்கேற்பவும் சமூகம் இயங்குவதற்குத் தேவையான பல்வேறு செயல்பாடுகளுட் சில முதன்மை பெறுகின்றன.

அவ்வாறு முதன்மை பெறும் செயற்பாடுகள் புரட்சிகரச் சமூகங்கள் அல்லாத சமூகங்களில் ஆளும் வர்க்க நலன்களைப் பேணுபவையாகவும் நிலைநாட்டுபவையாகவும் அமைகின்றன. பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் புலமைத்துவம் எனும் செயல்பாடு முதன்மை பெறுகிறது. ஏனெனில் அக்கால அரசர் நலன்காக்க அது அவசியமாயிற்று. முதலாளித்துவ அமைப்பில் முதன்மை பெறும் செயல்பாடுகளில் ஒன்றாக பொறியியல் இடம் பெறுகிறது. ஏனெனில் சந்தைகளை மையப்படுத்துதல், தொழிற்சாலை அமைத்தல், போக்குவரத்தைத் துரிதமாக்கல் போன்றவற்றின் மூலம் லாப உச்சமாக்கல் நோக்கில் உற்பத்திச் சக்திகளை பெருக்குவதற்கு இன்றியமையாத கட்டமைப்பை உருவாக்கப் பொறியிலாளரின் செயல்பாடு அவசியம். இவ்வாறு சில திறன்கள் ஒவ்வொரு சமூகத்தின் தன்மைக்கேற்ப முதன்மை பெறினும் ஒரு சமூகத்தில் காணப்படும் பல்வேறு செயற்பாடுகளின் பரஸ்பரப் பரிமாற்றங்கள் அச்சமூகத்தின் இயக்கத்திற்கு இன்றியமையாததே. செந்நாப் புலவனுக்கு கறிசமைத்த மனைவியின் அடுப்பங்கரைச் செயல்பாடும் பொறியியலாளனுக்கு எழுதக்கற்பித்த ஆசிரியரின் செயல்பாடும், முதன்மை பெறாவிடினும் இன்றியமையாதவையே. ஆகவே ஒரு



சமூகத்தில் சில திறன்கள் முதன்மை பெறுவதைக் கொண்டு வேறு செயல்பாடுகளின் பரஸ்பர பரிமாற்றங்களின் அவசியத்தை நாம் புறக்கணிக்க முடியாது.

ஆகவேதான் நாம் மீண்டும் மீண்டும் நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கும் எம் சமூகத்தைச் சரியான பாதையில் இயக்கிச் செல்லப் பொருத்தமான சில திறன்கள் முதன்மைபெற்று அத்துடன் இன்றியமையாத சமூக அடிக்கட்டுமானத்தை இயக்கும் செயல்பாடுகளின் உச்சப்பயன்பாடும் பெறப்படுதலையும் வலியுறுத்த வேண்டியதாகிறது.

இன்று எமது போராட்டப்பாதையில் ஆயுதவன்மை முதன்மை பெற்றுள்ளது. தமிழீழ வேலைத் திட்டத்தின் ஆயுதப் போராட்டம் என்பது பதிலீடு செய்யப்பட முடியாத ஒன்றே. நாம் மேற்கூறியது போல் ஒரு சமூகத்தின் தேவைகளை ஒட்டி முதன்மை பெறும் செயல்பாடுகளை அவை வெற்றிடத்தில் தனித்து நிகழ்பவையாக மயங்கிவிடுகிறோம். ஒரு சமூகத்தின் இயக்கத்திற்கு உற்பத்தியிலீடுபடும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ வழியில் இன்றியமையாதவனாயிருப்பது புரியப்படாமலிருப்பதே வரலாற்றில் ஆளும் வர்க்கங்கள் உருவாகவும் அவை நிலை கொள்ளவும் வழி வகுத்துள்ளது. 'சிறிமாவோ அம்மையாரால்' பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டதென அம்மண்டபம் கட்ட வியர்வை சிந்திக் கல்சுமந்த ஒரு தொழிலாளியின் குழந்தை பாடசாலையில் கற்று அதை மனதிற்பதித்து பரீட்சைக்கு மறுமொழி எழுதலாம். ஆளும் வர்க்கத்தை நிலைநாட்டவே இது வழி சமைக்கிறது. சமூக உருவாக்கத்தின் பல்வேறு செயல்பாடுகளின் பரஸ்பரத்தன்மை நம் கல்வி கலாச்சாரம் போன்றவற்றால் மறைக்கப்படுவதாலேயே இது நிகழக் கூடியதாய் உள்ளது. ஆகவே ஆயுதச் செயல்பாடும் திறனும் எம் தேவைகளையொட்டி முதன்மை பெறலால் அது தன்னளவில் நிகழ்வது எனும் மாயை தோன்றி நிலை கொள்ளுமாயின் அச்செயல்பாட்டைச் சாத்தியமாக்கிய மற்றச் சமூக நடவடிக்கைகள் ஊதாசீனப்படுத்தப்படும் ஒரு கொடுங்கோண்மை அரசே உருவாகலாம். தான் காட்டு வழி காட்டிய கெரில்லாவே தன் வறுமையைக் கூட்டும் செயல்திட்டங்களை அரசாங்கத்திற்கு வந்தவுடன் நடைமுறைப்படுத்தலைக் கண்டு மாடுகொண்டு செல்பவன் கவலைப்படலாம். பின் அவனும் அம்மாயையில் சிக்குண்டு தலைவிதி என்று வறுமையில் உழலலாம்.

எம்விடுதலைப் போராட்டமானது சமூக இயக்கத்திற்கு இன்றியமையாத சகல சமூக நடவடிக்கைகளின் பரஸ்பர உறவுகளைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

பிரதிபலிக்கக் கூடிய, அவற்றின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுத் தரும் கட்டமைப்பைப் பெறல் அவசியம்.

அதேவேளை இவ்வாறான கட்டமைப்பொன்றை எம் அரசியற் சிந்தனையில் முதன்மைப் படுத்தும்போது எம் சமூகம் பற்றிய தீர்மானங்கள் யுத்தத்தின் யதார்த்தங்களை உள்வாங்காமல் போய் விடும் அபாயமும் உண்டு.

எதிரியின் அச்சுறுத்தலுக்குத் திறந்து கிடக்கும் எல்லைக்கோடு. கிழக்கு மாகாணத்தின் சில இடங்களில் எல்லைக்கும் கடலுக்கு மிடையே 15-20 மைல் அகலமேயுள்ள காலன் வலைவீசக் காத்திருக்கும் பயங்கர இடைவெளியில் அப்பாவித் தமிழ் மக்கள். யுத்தமெனில் உணவு வேண்டும். அதன் உற்பத்தியை நெருக்கடியில் பேணவோ, அல்லது தமிழீழம் முழுதும் பரிமாற்றம் நிகழவோ வாய்ப்பில்லாப் பொருளாதார அமைப்பு.

எல்லைப்புறம் நெடுக எதிரியின் தீ வைப்பிற்கு அஞ்சி நிற்கும் கதிர் குலுங்கும் வயற்களங்கள். எம்சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுட் சில இவை. இவற்றை நாம் நோக்கும்போது இனப்படுகொலை அபாயம் எம்மைப் பூதாகரமாய் எதிர்கொள்ளும். இவ்வேளையிலே தமிழீழச் சமூகத்தின் சகல பரிமாணங்களையும் நன்கறிந்து பல்வேறு சமூகச் செயல்பாடுகளின் உச்சப் பயன்பாட்டைத் தரும் கட்டமைப்பின் மூலம் செயல்படுவோம். ●




http :\\ www. thamizham. net 

# நாளைக்கே விடிவு வரும்...

-அரசு மணிமேகலை

எது கிழக்கென்று
நம்
எல்லோருக்குமே தெரியும்...
ஆனால் அது
எப்போது வெளுக்கும்
என்பது மட்டும்தான்
எவருக்கும் தெரியவில்லை!

மரணம்
அசைத்துப் போட்ட
மாபெரும் மனிதர்கள்
உறங்கிவிட்டார்கள்!
ஆனால்,
மரணத்தையே
அசைத்துப் பார்க்கிற
இந்தப் போராளிகள்
இறந்த பின்னாலுமே
உறங்க மாட்டார்கள்...

விடியுமா பொழுதென்று
வெறித்துக் கொண்டில்லாமல்,
நெருப்புச் சூரியனையே
பூமிக்குக் கொண்டுவரப்
புறப்பட்டு விட்டவர்கள்...

மரணம் மனிதரைத்
துரத்திக் கொண்டிருக்க,
மனிதரோ மரணத்தைத்
துரத்திக் கொண்டிருக்க
துப்பாக்கிப் பறவைகள்
எம்பிப் பறக்கின்றன...

அங்கே கவனியுங்கள்!
மேகத்தில் கூட
ஒரு சோகம்
கலந்திருக்கிறது...

காட்டின்
மௌனத்தில் கூட
ஓர் அழுகை
காத்திருக்கிறது...

இலங்கையை நோக்கி
எல்லோர் விழிகளும்
திறந்திருக்கும் போதே,
மூச்சின் மென்னி
முறிக்கப் படுகிறது...
உண்மையோ அனாதையாய்
மூர்ச்சையாகிறது...

உடன்படிக்கையை
சிறீலங்கா அரசின்
உதடுகள் மட்டுமே
உச்சரிக்கின்றன...
ஆனால்
கழுத்துக்களை
நெறிப்பதைத்தான்
கைவிடக் காணோம்...

போராளிகள்
தினந்தோறும்
போராடிக்
கொண்டிருக்கிறார்கள்...
அலுப்பில்லாமல்—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சலிப்பில்லாமல்—
ஆர்வம் குறையாமல்—
ரத்தமே நெய்யாக
யுத்தத்தீ
வளர்க்கப்படுகிறது...

விழிகளின் சிவப்பினால்
அல்லவா
தீ
வேகமாய் எரிகிறது?

ஏகமாய்த்தான்
இந்தத்தீ
எரிகிறது என்றாலும்,
காடே முழுக்கக்
கரிந்துபோய்
விட்டால்,
எந்தத் தென்றலுக்கு
இலைகள்
மிகுந்திருக்கும்?

தேக்கு மரங்கள்
யாவும்
தீயிலே
எரிந்துவிட்டால்,
கோட்டைக் கதவுக்கு
முருங்கை மரத்தையா
பிறகு
பிளந்துபோய் வைப்பது?

இன்னும் கொஞ்சம்
உந்து சக்தியை
உற்சாகப் படுத்திக்
கொண்டு,
இதயங்கள் அனைத்தையும்
இணைத்துக் கொண்டு,
கோடிக்கைகள்
குமுறிக் கிளம்பினால்,
நெருப்புச் சூரியன்
நிலத்திற்கே வருவான்!

காற்றெல்லாம்
சேர்ந்தால்
கனத்தபுயல் வாராதா?
நம்பிக்கை கொள்வோம்!
நாளைக்கே
விடிவு வரும்...

●

"எமது எதிரி சிறிலங்கா அரசும், அதன் கூலிப் பட்டாளங்களுமே அன்றி அப்பாவிச் சிங்கள மக்கள் அல்ல. எமது எதிரி ஏகாதிபத்தியச் சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு எமது போராட்டத்தை நசுக்கி விடுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் நாம் சிங்கள மக்கள் அனைவரையும் எமது எதிரியாகக் கருதுவோமாக இருந்தால், இனவாதம் ஒன்றையே மூலதனமாகக் கொண்ட எமது எதிரிக்கு அது மேலும் வாய்ப்பாகவே அமையும்."

தோழர் உமாமகேஸ்வரன்



# கடமையைச் செய்து உரிமையைப் பெறுவோம்!

உலக சமுதாய வரலாற்றுச் சக்கரத்தின் சுழற்சி வேகம் ஒரு போதும் சீராக இருந்ததில்லை. இதன் வேகம் அடிக்கடி மாறுபடுவது யதார்த்த உண்மையாகும்.

வரலாற்றுச் சக்கரத்தை முன்னோக்கி இழுக்கும் சக்திகள் பலவீனப்படும்போது இவ்வேகம் குறைவதும், இச்சக்திகள் பலப்படும் போது வேகம் அதிகரிப்பதும் வெளிப்படை உண்மையாகும்.

இங்கு வேகம் மாறுகின்ற திருப்பு முனைகளையெல்லாம் (Turning Point) கவனமாக அவதானித்தால், இத்திருப்பு முனைகளின் பிரதான சக்திகளுள் ஒன்றாக மாணவர் சக்தி விளங்குவதைக் கண்டு கொள்ளலாம்.

இந்த மாணவர் சக்தி சரியான தலைமையைப் பெற்றுத் தீர்க்க தரிசனத்துடனும், சிந்தனைத் தெளிவுடனும் இயங்கும் போது, வரலாற்றுக் சக்கரம் சீரான வேக அதிகரிப்பைப் பெறுவதும் உரிய தலைமைச் சக்தி பெறப்படாதவிடத்து திடீர் வேக அதிகரிப்பைப் பெற்று, அதே போன்று திடீர் தடையை அடைவதும் குறிப்பேடுகள் தரும் பாடமாகும்.

ஈரானில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும், அதனது அடிவருடிப் பிற்போக்காளர்களையும் ஒரு கலக்குக் கலக்கிய "அமெரிக்கப் பணயக் கைதிகள்" விவகாரத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க பாத்திரத்தை வகித்துத் திருப்புமுனையானவர்கள் அந்நாட்டு மாணவர்களே. வீரம் விளைந்து கொண்டிருக்கும் பிலிப்பைன்ஸ் மண்ணிலே 1969 இல் உறுதியான ஆயுதப் போராட்டத் திருப்புமுனையிலே மாணவர் சக்தியின் பங்களிப்பு உறுதியானது ஏன்? 1971 ஏப்ரல் நாட்களில் சிறீலங்காவில் அரசைக் கடும் அச்சத்துக்குள்ளாக்கிய "ஏப்ரல் கிளர்ச்சி" என்று பெயர் பொறிக்கப்பட்ட நிகழ்ச்சிப் போக்கில் பிரதான திருப்புமுனைச் சக்திகளும் மாணவர் சக்தியே என்பது எமக்கு மிகவும் நெருங்கிய உதாரணமாகும். (முடிவுகள் பற்றிய விடயம் வேறு; நாம் இங்கு அவதானிப்பது திருப்பு முனைகளைத்தான்.) வரலாற்று வரலாறாகச் சிறீலங்கா பேரினவாத அரசின் திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு ஆளாகி வந்த தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புணர்வுகளுக்கு அழுத்தம் ஊட்டிப் போராட்ட முறைகளிலும் திசை வழிகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரலாற்றுச் சக்கரத்தை அமைக்க அடிப்படையாக அமைந்தது தமிழீழ மாணவர் சக்தியேயாகும்.


வரலாற்றில் இந்தத் துல்லியமான பாத்திரத்தை "மாணவர் சக்தி' வகிப்பதில் சமூக உற்பத்தியுடன் எந்தவித தொடர்புமற்ற

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அல்லது ஆதிக்கம் மிக்க தொடர்பற்று இருக்கும் நிலை மற்றும் மாணவர்கள் வயது சார்ந்த உளவியல் என்பவை முக்கிய காரணங்களில் வெளிப்படையானவை.



சமூக உற்பத்தியுடன் நேரடித் தொடர்பற்ற காரணத்தால் வழக்கத்திலுள்ள சமூகக் கட்டமைப்பில் ஆதிக்கம் மாணவர் மீது குறைந்தளவே பிரயோகிக்கப்படுவதால் புறச் சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாது பிரிந்த செயற்பாட்டு வரம்புகள் இயங்குகின்ற வாய்ப்பை அடைகின்றனர். இக்கட்டுப்பாடற்ற வேகம் வரலாற்றுச் சக்கரம் எங்காவது ஒரு இடத்தில் முட்டி மோதி, மேலும் முன்னோக்கி இயங்க முடியாத செயலற்ற நிலைக்கு ஆளாவதற்குக் காரணமாகப் பெரும்பாலும் அமைந்துவிடுகின்றது.

மற்றும் மாணவர்களது வயது, பருவகால எழுச்சிகளுக்குரியதாய் அதிகளவான செயல்த் தூண்டல், அசட்டுத் துணிவு, திடீர் உற்சாகம் போன்ற மனோவியல்த் தன்மைகள் மேலோங்கி மனம் போன போக்கில் செயற்படும் அகநிலைவாதத்திற்கு ஆளாகி தீவிரவாதத் தவறுகளிழைப்பதற்குக் காரணமாகி விடுகிறது.

எமது விடுதலைப் போராட்டமும் தனது சொந்தத் தேவைகளிற்கேற்ப ஏற்ற இறக்கங்களிலூடாக வளர்ந்து வருகின்றது. இவ்வளர்ச்சிப் போக்கின் பிரதான சக்திகளுள் நாம் (மாணவர்கள்) தற்போது முதன்மை பெறுகிறோம். எனவே தமிழீழ மாணவர் சக்தியாகிய நாம், எமக்குள்ள கடமையை உணர்ந்து கருத்து ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் சரியான தலைமைச் சக்தியைப் பெற்று வெற்றியைக் கைப்பற்றும் பணியில் அணிதிரண்டு எந்த அளவிற்கு செயலாற்ற முடியுமோ, அந்த அளவிற்குச் செயலாற்ற உரிமைகளைப் பெற உறுதிபூண வேண்டும்.

நாம் இன ஒடுக்குமுறையை எதிர்த்து மட்டும் போராடவில்லை. பிரதான எதிரியாகிய ஏகாதிபத்தியத்தை விரட்டியடிப்பதற்காகவும் தொடர்ந்து ஆதிக்கம் மிக்க சுரண்டும் வர்க்கங்களை வீழ்த்தவும் அதாவது சமுதாய விடுதலையைப் பெற அல்லும் பகலும் உழைக்க வேண்டியவர்கள்.



இந்த வகையில் உழைக்கும் வர்க்கம் தலைமைச் சக்தியை நோக்கி முன்னேறுவதற்குப் படிக்கற்களாக நின்று உழைக்கின்ற கடமை எமக்குண்டென்று விடுதலைப் போராட்ட மாணவர்களாகிய நாம் தெளிவாக உணர்தல் வேண்டும்.

தொடர்ந்து உழைக்கும் மக்களின் தலைமையில் போராடுவோம் என்ற வார்த்தை மழைகளைக் கொட்டிவிடுவதனால் வெந்த மண் ஆறி விடுதலை கிடைத்துவிடாது.

நடைமுறை யதார்த்தத்தில் நமக்கு முன்னாலுள்ள வரலாற்றுக் கடமைகளை ஒவ்வொருவரும் உணர்ந்து ஒவ்வொருவரும், இந்தச் சிந்தனைகளிலிருந்து மீண்டுவிடாது தமது கடமைகளை வரையறுத்துப் பொறுப்புடன் செயற்படின் நாளையை வரலாற்றை நமதாக்கிக் கொள்ளலாம்.

அதாவது உழைக்கும் மக்களைத் தலைமைப் பாத்திரத்திற்குக் கொண்டுவரும் கடமையை நிறைவேற்றப் பாடுபடல், மற்றும் உழைக்கும் மக்கள் தலைமையில் விடுதலைப் போராட்டத்தில் எமது பூரண பங்களிப்பை வழங்குபவர்களாகச் செயற்படுவதற்குரிய பக்குவத்தைப் பெற்று உழைத்தல் ஆகிய கடமைகளிற்கேற்ப எமது வேலைத் திட்டங்களை வரையறுத்துக் கொள்வது, அதனடிப்படையில் செயற்படுவது இன்றுள்ள பிரதான பணியாகும்.

# புதிய வாழ்வைப் புடமிட . . .

● யசோதரன்

மனித வாழ்வில்
எத்தனை நேசம்
மண் குடிசையில்
எத்தனை சோகம்?

எங்கள் குடிசையில்
ஒழுகும் மழைத்துளி
ஏழைகள் மனதைப்
பிழியும் சோகத்துளி!

விடிவில்லா வாழ்வில்
வேட்கையுடனே போராட்டம்!
முடிவில்லா வறுமை
வேட்டையாடி அதைவாட்டும்!

எதிர்காலம் ஒளிவீசும்
என்ற நம்பிக்கை
கேள்விக் குறியா?

சூழ்ந்து நிற்கிறார்
விடிவைத் தடுக்கும்
இருளில் கொழுக்கும்
சூழ்ச்சிக் காரர்.

விஷக்காற்றைப் பரப்பும்
வீணரை வீழ்த்த
வீறுடன் எழுவோம்.

இன்று எங்கள்
உதிரத்தை இவர்கள்
உறிஞ்சலாம்,
என்றும் எங்கள்
உணர்வைச் சிதைக்க
விடலாமோ?

அணிவகுத்துத்
திரண்டிடுவோம்
புரட்சித் தீயை
ஏற்றிடுவோம்
பழையன எல்லாம்
பொசுக்கிடுவோம்
புதிய வாழ்வைப்
புடமிடுவோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சூரியனோடு பேசுதல்


வ.ஐ.ச.ஜெயபாலன்

கண்மலர
நாள் விடியும்.

ஓடுகின்ற பஸ்சின் வெளியே
என்றும் இளமை மாறாத எம் உலகம்.
மஞ்சள் முகம் மலர
சீனத்துத் தேவதையாய்
சுவர்க்கம் இருந்து சூரியன் எழுந்து வரும்.

கரும்புத் தோட்டத்தின் மீது
கழிகின்ற கிராமத்து வீதிகளில்
தொழிற்சாலை ஒன்றின் இரும்புக் கழிவுகளில்
தலை நிமிரவுள்ள மானிடத்தின்
பாதை திசையெல்லாம் இருள் துடைத்து
நம்பிக்கைக் கோலம் எழுதுகின்ற சூரியனே!
நேற்று அதிகாலை
என்னுடைய தாய் நாட்டின் காடுகளில்
துணை வந்த தோழர்களோடு
உன்னை நான் எதிர்கொண்டேன்.
நேற்று இள மாலையிலே
இருள்கவியும் கடல் மீது
போராடி முன்னோக்கும் படகில்
பிரியும் உன் முகம் நோக்கி
உள்ளம் கிளர்ந்திருந்தேன்.





இன்று அதிகாலை
தமிழகத்தில்
ஓடுகின்ற பஸ்சின் சன்னலால் முத்தமிட்டாய்
கண்விழித்த எந்தன் கரங்களுக்குள்
ஒரு புதிய நாளைப் பரிசு தந்தாய்.

தீ நடுவே ஒரு பூவாய்
போர்க்களத்தில் உயிர்த்திருக்கும்
எங்களது வாழ்வுக்கு
இந்நாளை நான் தருவேன்.
மீண்டும் என் தாய் நாட்டின் கரைகளிலே
எம்முடைய கால்களிலே எழுந்து நின்று
உனைக்காணும் நாட்களை மீட்டெடுக்க
இந்நாளை நான் தருவேன்.

## முன்னாள் எம்.பி.க்கள் படுகொலை அஞ்சலிப் பொதுக் கூட்டம்

இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னாள் தமிழீழ எம.பிக்களான திரு. வி. தர்மலிங்கம், திரு. மு. ஆலால சுந்தரம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதை ஒட்டி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகத் தமிழீழ மாணவர் பேரவையினர் 13—9—85 அன்று மாலை சென்னை தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றினை நடாத்தினர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர் க. உமா மகேஸ்வரன் (முகுந்தன்) தமிழகக் கவிஞர் இன்குலாப் எழுத்தாளர் மாலன் ஆகியோர் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு மறைந்த தமிழ் எம். பிக்ளுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம் மக்களும்

வ.ஐ.ச.ஜெயபாலன்

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்து, ஆறாயிரத்துக்கும் சற்று அதிகமான மலையகத் தமிழர்களை வெளியேற்ற எடுக்கப்படும் முயற்சிகளில் அரசு வெற்றி பெறுமானால், மிக விரைவில் தமிழர்கள் என்ற அடிப்படையில் முதன்மை பெறுவது திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்துச் சாத்தியமற்றதாகிவிடும்.

1981ம் ஆண்டின் புள்ளிவிபரங்களை ஆராயும் ஒருவர், இனரீதியில் 402 தலைகளில் மட்டுமே திருகோணமலையில் இலங்கைத் தமிழர்களின் முதன்மையின் தலை இன்னமும் தப்பியுள்ளது என்பதைக் கண்டு கொள்பவர்.

சமயரீதியில் ஏற்கனவே பௌத்தம் முதன்மை பெறும் மாவட்டங்களில் ஒன்றாகத் திருகோணமலை மாற்றப்பட்டு விட்டது.

இத்தகைய விஞ்ஞானபூர்வமான பார்வையைப் பெறும் தமிழ் பேசும் மக்கள் தலைமை எதுவும் காலாவதியாகிப் போய் விட்ட அகநிலை நோக்கான யாழ்ப்பாண நோக்கு அடிப்படையில், (அல்லது சற்று விரிவான இலங்கைத் தமிழர் நோக்கின் அடிப்படையில்) விடயங்களைப் புரிநது கொள்ளுவதிலும், திட்டமிடுவதிலும், அரசியற்படுத்துவதிலும், நிகழ்ந்துவரும் தவறுகளையும் அதனால்வரும் ஆபத்துகளையும் புரிந்து கொள்ளுவர்.

தமிழ்ப் பிரதேசங்களை, முக்கியமாகக் கிழக்கு மாகாணத்தையும், புத்தளம் மாவட்டத்தின் வடக்குக் கரையோரங்களையும் பாதுகாத்துக் கொள்வது தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தைக் (தமிழ் பேசும் மக்களது ஐக்கியத்தை) கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பங்குபற்றுதல் இன்றித் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றிய பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈடுபடுவது, வேடிக்கையானதாகும்.



மாவட்ட அடிப்படையில்
கிழக்கு மாகாணத்துக் குடிசன அமைப்பு (1981)

| இனப்பிரிவு | மட்டக்களப்பு | அம்பாறை | திருமலை | மொத். |
|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 234,348 | 78,315 | 86,743 | 399,406 |
| மலையகத் தமிழர் | 3,868 | 1,410 | 6,767 | 12,054 |
| முஸ்லிம்கள் | 79,317 | 161,481 | 74,403 | 315,201 |
| சிங்களவர் | 10,646 | 146-371 | 86,341 | 243,358 |
| பறங்கியர் | 2,300 | 643 | 1,211 | 4,154 |
| மலாயர் | 49 | 179 | 735 | 963 |
| ஏனையோர் | 371 | 387 | 590 | 1,348 |
| மொத்தம் | 330,899 | 388,786 | 256,790 | 976,475 |

**தமிழ்பேசும் மக்களின் எதிர்காலமும் முஸ்லிம் மக்களும்**

இத்தகையதோர் அரசியல், சமூக நிலைமைகளில் முஸ்லிம் மக்கள் புதியதொரு வரலாற்றுக் கட்டத்தில் நுழைவது, தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் தொடர்பாக, மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

சாதாரண முஸ்லிம் மக்களது மட்டத்துக்குக் கல்வி வாய்ப்புகள் பரவலாகி வருவதாலும், வருமானப் பங்கீடு தொடர்பான மாற்றங்களாலும் அவர்கள் மத்தியில் பலமாக நிலவிவந்த வர்க்க அமைப்புகள் முதன்முறையாக குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலைமை கொழும்புக்கு வெளியே முஸ்லிம் பிரதேசங்களில் மத்தியதர வர்க்கத்தின் வளர்ச்சி துலாம்பாரமாகப் பாவலாகி வருவதற்கும், கற்றறிந்த இளைஞர் குழுக்கள் தோன்றுவதற்கும் வகை செய்துள்ளன. கொழும்பு போன்ற நகர்கள் சார்ந்து சிறிய அளவில், ஆலைத் தொழிலாளர்களும் முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 'போடி' நிலக்கிழார் அமைப்பின் கீழ் நசுங்குண்டு வாரக் குடிகளாகப் பிணைக்கப்பட்டிருந்த பலரும், சிறு விவசாயிகளாகவோ அல்லது விவசாயக் கூலிகளாகவோ புதிய தோற்றம் பெற்றுள்ளதும், அவர்கள் மத்தியில் இருந்து சிறு முதலாளிகளும், கற்றறிந்த வாலிபர் கூட்டங்களும் தோற்றம் பெற்று வருவ

www.tamilarangam.net



தும், புதிய நிலைமைகளைப் பலப்படுத்துவதுடன் எதிர்கால முஸ்லிம் மக்களின் அரசியலின் இயங்கியற் போக்கை நிர்ணயிப்பதாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக ஒரு சில முஸ்லிம் தனவந்தர்களோ, அல்லது குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்து நிலக்கிழார்களான ஒரு சில முஸ்லிம் 'போடியார்' களோ கட்டுப்படுத்தி வந்த முஸ்லிம் மக்களது அரசியல், இறுதியாக அவர்களது கிழடு தட்டிய கைகளின் பிடிகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விட்டது.

பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த முஸ்லிம் தனவந்தர்களையும், போடிமார்களையும் கையுள் போட்டுக் கொண்டு கையாலாகாத அரசியல் நடத்திய கொழும்பு முஸ்லிம் தலைமைகள், இன்று செயலிழந்து தவிக்கின்றன.

எழுபதுகளில் இலங்கைத் தமிழர்களது அரசியலின் பிரதான போக்காக அமைந்த எழுச்சிக்குரல், வேறு ஒரு வடிவத்தில் முஸ்லிம் அரசியலிலும் தோற்றம் பெறுவதை இனங்கண்டு கொள்பவர்கள், இரண்டு போக்குகளையும் இணைத்து, தமிழ் பேசும் மக்களது எதிர்காலத்தை இனங்கண்டு கொள்வர்.

கொழும்புத் தலைமைகளின் தொடர்ச்சியான ஆதரவைப் பெற்றுவந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற சிங்கள, பௌத்த தேசியவாதக் கட்சிகளின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளால் குரலற்றுப் பாதிக்கப்பட்டு வந்தவர்களின் இளைய தலைமுறையினர், இன்று குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

யூ. எல். எம். ஜெயினுதீன் என்ற யாழ். பல்கலைக்கழக மாணவன் தனது கட்டுரை ஒன்றில் வேகந்தை சம்பவத்தின் போது பொலிஸ் பகுதியினரால் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதுடன், பள்ளிவாசலும் சேதப்படுத்தப்பட்டது. ஆளும் கட்சியின் ஓரிரு முஸ்லிம் அரசியல் பிரமுகர்களினால் இவ்வுண்மை இருட்டடிப்புச் செய்யப்பட்டு, இது பற்றிய விசாணை கூட புதைக்கப்பட்டுவிட்டது. சமீபத்தில் (1982ல்) காலியில் ஏற்பட்ட (சிங்கள—முஸ்லிம்) இனக்கலவரத்தின் போதும் வாய்திறக்க அஞ்சியிருந்த ஆளும் கட்சியின் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு, எதிர்கட்சித்தலைவர் (திரு. அமிர்தலிங்கம்) குரல் எழுப்பிய பின்புதான், இது பற்றிக் கேட்கத்துணிவு பிறந்தது'' எனக் குறிப்பிட்டுக் கோபப்படும்—கூழ்முட்டையாகி வரும் கொழும்பு முஸ்லிம் தனவந்தர்களின் நலன்களை அடைகாக்கும்—முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் கோழைத்தனத்தால் ஏமாற்றப்பட்டு வந்தவர்களது இளைய தலைமுறையினர், கிராமங்கள் நகரங்கள் தோறும் எழுச்சி பெறுவதுடன், புதிய தலைமைக்காகக் குரல் கொடுக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மத்தியில், தமிழர் நோக்கில் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்குச் சேவை செய்தபோதும் முஸ்லிம் மக்களைப் பொறுத்து, கல்வியையும், உயர்கல்வி வாய்ப்புகளையும் அதிகரித்துப் பரவலாக்கியதன் மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, முன்னைநாள் கல்வி அமைச்சர் 'அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதின் புறநடையான பங்களிப்பால், இன்று இம்மக்கள் மட்டத்திலிருந்து கற்றறிந்த, போர்க்குணம் மிக்க இளைஞர் கூட்டத்தினர் மேலெழுந்து வருகின்றனர்.



தமிழ்பேசும் மக்களது ஐக்கியத்துக்கும், பிரதேசப் பாதுகாப்புக்குமான பலமான அத்திவாரங்களை 1950களில் தேடியவர்கள், அவற்றைக் கண்டடையவில்லை; 1980களில் தேடுபவர்கள் அவற்றைக் கண்டடைவார்களா?

1970களில் இடம் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசின் முஸ்லிம் விரோதப் பயங்கரவாதத்துக்கு உதாரணமாக 1976 ஐப்பசி 2ல் புத்தளம் பள்ளிவாசலும் முஸ்லிம் வட்டாரங்களும் அரசபயங்கரவாதிகளாலும், சிங்கள பௌத்தக் காடையர்களாலும் தாக்கப்பட்டதையும் ஆறு முஸ்லிம்கள் கேட்டுக் கேள்வியின்றிப் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதையும் இங்குக் குறிப்பிடலாம். 1979ன் பின் அரசுகட்டில் ஏறிய ஐக்கிய தேசியக்கட்சி அரசின் பயங்கரவாதத்துக்கு, 1982ல் இராணுவத்தினாலும், பொலிசாரினாலும், சிங்கள பௌத்தக் காடையர்களாலும் காலிநகரின் முஸ்லிம் வட்டாரங்களும், அயலிலுள்ள பன்னிரண்டிற்கும் அதிகமான கிராமங்களும் தாக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்டமையை— ஒருவர் கொலையுண்டது உட்பட, நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்தைக்— குறிப்பிடலாம். இச்சம்பவங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மூடிமறைக்கக் கொழும்பு முஸ்லிம் தலைமைகளின் உதவியை சிறீ.ல.சு.க., ஐ.தே. கட்சிகளின் அரசுகள் பயன்படுத்தின.

இத்தகைய சம்பவங்களினால் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளின் தேசிய, முற்போக்கு முகமூடிகளை இனங்கண்டு கொண்ட முஸ்லிம் மக்களின் அபிலாசைகளும், போராட்டங்களும் முஸ்லிம் மக்களின் சிக்கல் மிக்க சமூக, புவியியற் பிளவுகளையும் மீறி, தமிழ் மக்களது போராட்டத் திசைகளைப் பெற்று வருகின்றன.

இன ஒடுக்குதல்களுக்கெதிராகத் தமது சமூக ஆளுமையையும் தனித்துவத்தையும் பேணும் பிடிவாதமும் போர்க்குணமும், முஸ்லிம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இஸ்லாம் சமயத்துக்கு மட்டுமே அடுத்த நிலையில் தமிழ் மொழியை, தமது தனித்துவத்தின் சின்னமாகக் கருதும் போக்கும், பிடிவாதமும் முஸ்லிம் மக்களிடை அதிகரித்து வருகின்றது. நிலைமையைப் புரிந்துகொள்வதற்கு, தமிழர்களைப் போலன்றி முஸ்லிம்கள் இனவெறி மிகுந்த சிங்கள பௌத்த சூழலில் தமிழை ஓங்கி ஒலிக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் இங்கு அவசியமாகும்.

தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் இன்றைய எழுச்சிக்குமிடையில் பின்வரும் பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன

(1) சிங்கள பௌத்த பேரினவாதத்துக்குத் தலைபணிய மறுக்கும்போக்கு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(2) என்ன விலைகொடுத்தும் தமது பாரம்பரியப் பிரதேசங்களையும், கிராமங்களையும் பாதுகாக்கும் போர்க்குணம்.

(3) கொழும்பு சார்ந்த மேலோர் குழுத் தலைமையைத் தூக்கி எறியும் விழிப்புணர்வும், முற்போக்கும்

(4) தமிழ் மொழி மீது ஆர்வம்.

இத்தகைய பொதுப் போக்குகளை அமைப்பு ரீதியாக இணைக்கும் ஐக்கிய முன்னணி முயற்சிகளே, மக்கள் மத்தியில் வேலை செய்தல் என்ற பிரச்சினையின் ஆரம்பக் கவடாகவும் அடிப்படைத் திசையாகவும் அமைதல் கூடும். இதுவே யாழ்ப்பாணக் கிடுகு வேலிச் சிறைகளைத் தகர்த்துக் கொண்டு தமிழ்மக்களது அரசியலும் போராட்டமும், தமிழ் பேசும் மாநிலமெங்கும் மக்கள் இயக்கமாகப் பரிணமிப்பதற்கு அடிப்படை நிபந்தனையாகவும் அமையும்.


தமிழ் பேசும் மக்களது கடந்த கால அரசியல் வரலாறு கற்பிப்பது இதுதான்; தமிழ் பேசும் மாநில மட்டத்தில் அவர்கள் ஒன்றிணைவதன் மூலம் மட்டுமே, சிங்கள மாநில மட்டத்தில் ஒன்றிணையவுள்ள தமிழ்பேசும் மக்களது-முஸ்லிம், மலையகத்தமிழர்களினது எதிர்கால விடுதலையையும் பாதுகாப்பையும் திட்டமிடுதலும், திட்டமிட்ட அடிப்படையில் உறுதிப்படுத்துதலும் சாத்தியமாகும்.

இத்தகைய அமைப்பு ரீதியான வளர்ச்சியே, சிங்கள மாநிலம் சார்ந்த அவர்களது பிரச்சினைகளின் சிக்கல்கள் எவ்வண்ணம் விடுவிக்கப்படலாம் என்பதற்கு இருக்கக்கூடிய பல்வேறு தீர்வுகளை விஞ்ஞான பூர்வமாக வகுத்துக் கொள்ளவும், முற்போக்கான அரசியல் விவேகத்துடன் அவற்றுள் பொருத்தமான தீர்வை, அல்லது தீர்வுகளைத் தெரிந்து கொள்ளவும் வழி வகுக்கும்.

எப்படிப் பார்த்தாலும் முஸ்லிம் மக்களைப் பொறுத்து, தமிழ் பேசும் மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களும், ஏனைய தமிழர்களும் தேசிய இனத்தன்மையையும், சிங்கள மாநிலத்தில் வாழும் முஸ்லிம்களும், ஏனைய தமிழர்களும் தேசிய சிறுபான்மை இனத்தன்மையையும் கொண்டுள்ளனர் என்ற அடிப்படை உண்மையை ஏற்றுக் கொள்வது அவசியமாகும்.

இக்காரணத்தால் மிக உயர்ந்தபட்ச அமைப்புரீதியான வளர்ச்சியையும், வல்லமையையும் முஸ்லிம் மக்கள் தமிழ்பேசும் மாநிலத்தில் மட்டுமே பெறுதல் கூடும். இது தமிழ் பேசும் மக்களது ஒருமித்த போராட்டமாக அமையும்போது, முஸ்லிம் மக்களது பலம் ஒரு நாட்டினத்தின் பலமாக சர்வதேச ரீதியாகவும், தமிழ் நாட்டிலும் பக்க பலம் பெற்றதாக அமையும். இப்போராட்டம் இன ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டம் என்ற வகையில்— இனஒடுக்குதலுக்கு எதிரான முற்போக்கான அம்சங்களை இயல்பாகவே பெற்றுள்ளது. இந்த முற்போக்கான அம்சங்கள் முதன்மை பெறும்போது இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் மட்டுமல்ல; தமிழ்நாட்டு முஸ்லிம்கள், தமிழ்நாடு, இந்தியா, அராபிய நாடுகள் என அனைத்து உலகமும் இலங்கை முஸ்லிம் மக்கள் சார்பில் நிற்பதை, அவர்கள் காணுவார்கள். இதன் மூலம் மட்டுமே சிங்கள மாநிலத்தில் சிதறி வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களின் சிக்கலான பிரச்சினைகளுக்கு நீண்ட காலத் தீர்வைத் திட்டமிடுதலும், மக்கள் அமைப்புகளை அதனடிப்படையில் நெறிப்படுத்தித் தீர்வுகளை அடைதலும், சாத்தியமாகும். ●





# அதிகாலையின் அமைதியில்...!

**பரீஸ் வஸீலியெவ்**

(தொடர் நவீனம்)

கையோடு கொண்டு வந்திருந்த பண்டங்களை அவர்கள் சிரிப்பும் வேடிக்கையுமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பகைவர்கள் வெகு தூரம் விலகிப் போய் விட்டார்கள். ஓசை நிறைந்த கரையையும் ஆரவாரிக்கும் பெண்களையும் பார்வையில் படாத ஆண்களையும் விட்டுக் கம்பி நீட்டிவிட்டார்கள் அவர்கள். காட்டில் புகுந்து சுவடு தெரியாமல் மறைந்து விட்டார்கள்.

இது வஸ்கோவுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு இராணுவ அனுபவத்தோடு வேட்டை அனுபவமும் இருந்தது. பகைவனையும் கரடியையும் பார்வையிலிருந்து தப்பவிடுவது சரியல்ல என்பதை அவன் அறிந்திருந்தான். பகைவன் இன்னும் என்ன சூழ்ச்சி செய்வானோ, எங்கே பாய்வானோ, இரகசியங்களை எங்கே மறைப்பானோ சைத்தானுக்கே வெளிச்சம்? வேட்டைக்காரன் கவனமாய் இல்லாவிட்டால் கரடி அவனை வேட்டையாடுகிறதா அல்லது அவன் கரடியை வேட்டையாடுகிறானா என்று விளங்காத நிலைமை ஏற்படுவது உண்டு. இப்போது அதே மாதிரி நிலைமை ஏற்படும்போல் இருந்தது. அதைத் தவிர்ப்பதற்காகச் சார்ஜண்டு மேஜர் பெண்களைக் கரையில் இருக்கச் சொல்லி விட்டு, ரீதாவுடன் தேட்டம் நடத்தப் புறப்பட்டான்.

'என்னைத் தொடர்ந்து வா, ரீதா நான் நின்றால் நீயும் நில்லு. நான் படுத்தால் நீயும் படு, ஜெர்மானியர்களோடு கண்ணாம் பூச்சி விளையாடுவது சாவோடு விளையாடுவதுபோல. ஆகவே காதுகளைக் கூராக்கிக் கொள். காதுகளையும் கண்களையும்' என்றான் வஸ்கோவ்.

அவர்கள் குன்றுத் தொடரைக் கடந்து தலைமை அரணை அடைந்தார்கள். பின்பு காலையில் லீஸா ஜெர்மானியருக்குத்

www.tamilarangam.net



தெரியாமல் புகுந்து சென்ற தேவதாருச் சோலையை அடைந்தார்கள். அழிவுவேலையினர் எவருமே இயற்கையில் நிலவவில்லைப்போல இப்போதைக்கு எல்லாம் சந்தடியற்றும் அமைதியாகவும் இருந்தன. ஆனால் வஸ்கோவ் தானும் அப்படி நினைக்கவில்லை. ஜூனியர் சார்ஜண்டு ரீதாவையும் அவ்வாறு எண்ணவிடவில்லை.

சார்ஜண்டு மேஜர் நின்றான். தொலை நோக்கியால் புதர்களைத் துருவிப் பார்த்தான். உற்றுக் கேட்டான். பின்பு குன்றுச் சரிவு வழியே ஏரி நீர்ப் பரப்பை நோக்கி வீசிய காற்றை நீண்ட நேரம் முகர்ந்து கொண்டிருந்தான். ரீதா பணிவாக அருகே அசையாமல் படுத்துக் கிடந்தாள். தன் உடை பாசியில்பட்டு மெதுவாக நனைவதை உணர்ந்து அவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று.

'மூக்கில் படுகிறதா?' என்று தணிந்த குரலில் கேட்டு விட்டுத் தனக்குள் சிரித்துக் கொண்டான் வஸ்கோவ். 'பண்பாடு ஜெர்மானியனைக் காட்டிக் கொடுத்துவிட்டது. காப்பி சாப்பிட விரும்பியிருக்கிறான்'.

'ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?'

'புகை வாடை அடிக்கிறது. ஆகவே அவர்கள் சாப்பிட உட்கார்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. பதினாறு பேருமா என்பதுதான் கேள்வி...'

சற்றுநேரம் சிந்தித்துவிட்டு அவன் துப்பாக்கியைத் தேவதாரு மரத்தில் பாங்காகச் சார்த்தி வைத்தான். இடைவாரை முடிந்தவரை நன்றாக இறுக்கிக்கொண்டு, மண்டியிட்டு உட்கார்ந்தான்.

'அவர்களை எண்ணிக் கணக்கிட வேண்டும். ரீதா எவனாவது தப்பிப் போய்விட்டானா என்று பார்க்க வேண்டும். நான் சொல்வதைக் கேள். துப்பாக்கிச் சூடு கேட்டால் உடனே போய் விடு. அந்தக் கணமே போய் மற்ற பெண்களையும் சேர்த்துக் கொள். நேராகக் கிழக்கே நடவுங்கள், கால்வாய் வரை. அங்கே நம்மவர்களுக்கு ஜெர்மானியர்களைப் பற்றித் தகவல் கொடு. அவர்களுக்கு இந்தத் தகவல் அதற்குள் கிடைத்திருக்கும். நம் லீஸா இதோ கிளை நிலையம் போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமே. எல்லாம் விளங்கிற்றா?'

'இல்லை. நீங்களோ?' என்றாள் ரீதா.

'நீ என்ன ரீதா, விடு இந்தப் பேச்சை' என்று கண்டிப்பாகச் சொன்னான் சார்ஜண்டு மேஜர். ''நாம் இங்கே காட்டுப் பழங்களும் குடைக்காளான்களும் சேகரிக்க வரவில்லை. ஜெர்மானியர்கள் என்னைக் கண்டு கொண்டால் உயிரோடு விட மாட்டார்கள். சந்தேகமே படாதே. அதனால்தான் சொல்கிறேன், உடனே போய்விடு. புரிந்ததா உத்தரவு?'

ரீதா பேசாதிருந்தாள்.

'நீ என்ன பதில் சொல்ல வேண்டும், அஸ்யானினா?

'புரிகிறது என்று சொல்ல வேண்டும்'.

சார்ஜண்டு மேஜர் வாய்க்குள் சிரித்துக் குனிந்து பக்கத்துப் பாறைக்கு ஓடினான். ரீதா



அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவன் எப்போது கண்ணுக்கு மறைந்தான் என்பதைக் கவனிக்கவில்லை.

ஒன்றும் நேர முடியாது என்ற உறுதியான நம்பிக்கையுடன், அனேகமாக மனப்பதற்றம் இன்றிக் காத்திருந்தாள் அவள், இன்பமான முடிவுகளையே எதிர்பார்க்குமாறு பயிற்சி வளர்க்கப்பட்டிருந்தாள் அவள். வெற்றியில் சந்தேகம் கொள்வது அவளுடைய தலைமுறையின் நோக்கில் அனேகமாக துரோகம் செய்வதற்கு ஒப்பாயிருந்தது. அச்சத்தையும் நிச்சயமின்மையையும் அவள் உணர நேர்ந்தது உண்டுதான். ஆயினும் நலமான முடிவு பற்றிய உள நம்பிக்கை எதார்த்த நிலைமைகளைக் காட்டிலும் எப்போதும் வலியதாகவே இருந்தது.

ரீதா எவ்வளவோ கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள், எதிர்பார்த்துக் காத்திருந்தாள் என்றாலும் வஸ்கோவ் அவள் எதிர்பாராதபோது, ஓசையின்றி வந்து சேர்ந்தான்.

'தோழர் அஸ்யானினா, நீ மோசமான படையினள். ஒன்றுக்கும் உதவாத படையினள்'.

அவன் கோபப்படாமல் கவலையுடன் இப்படிச் சொல்லவே, ரீதா புன்னகைத்தாள்.

'ரீதா, பத்துப் பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்தேன். இரண்டுபேர் மறைவில் இருக்கிறார்கள். அவர்களையும் கண்டேன். மற்றவர்கள் வேறு இடங்களில் வேலை செய்வதாக நினைக்க வேண்டும். நீண்ட நேரம் தங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்: காலுறைகளை நெருப்பருகே உலர்த்தி இருக்கிறார்கள். ஆகவே நாம் இடத்தை மாற்ற இதுதான் சரியான சமயம். நான் இங்கே பாறை வழியே ஊர்ந்து சுற்று முற்றும் பார். இரகசியமாக இங்கே அழைத்து வா. சிரிப்பு கண்டிப்பாகக் கூடாது!'

'எனக்குப் புரிகிறது'.

'இன்னும் ஒன்று. என் புகையிலைப் பையை அங்கே காயப் போட்டிருக்கிறேன், தயைசெய்து எடுத்து வா. சாமான்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்'.

'எடுத்து வருகிறேன்'.

ரீதா படையினரை அழைத்து வருவதற்குள் வஸ்கோவ் பக்கத்திலும் தூரத்திலும் இருந்த எல்லாப் பாறைகளையும் ஊர்ந்து ஏறிப் பார்த்தான். உற்றுக் கவனித்தான், கூர்ந்து கேட்டான், ஓயாமல் முகர்ந்து பார்த்தான்.

தன் படையினர் வருவதை அவன் மறுபடி தூரத்திலிருந்தே தெரிந்து கொண்டான். அவர் சந்தடி செய்யவோ கிசுகிசுக்கவோ கூட இல்லை. ஆனாலும் —என்னதான் விந்தையோ!— அவர்கள் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் வரும்போதே கமாண்டர் அவர்கள் வருவதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டான். நடைவேகம் காரணமாக அவர்களுக்கு மூச்சு இரைத்ததோ, அல்லது ஓடிக்கொலோன் மணம் அவர்களுக்கு முன்னே வந்ததோ, தெரியாது. ஜெர்மன் அழிவுவேலையினரிடையே உண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையான வேட்டைக்காரன் இல்லாதது குறித்த வஸ்கோவ் மனதுக்குள் மகிழ்ச்சி அடைந்தான்.

புகை பிடிக்க அடங்காத ஆசை உண்டாயிற்று. ஏனென்றால் பாறைகள் ஊடாகவும் சோலைகள் வழியாகவும் இரண்டுமணி நேரத்துக்குமேல் சுற்றி வந்திருந்தான். ஆசைக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகவே புகையிலைப் பையைப் பெண்கள் அருகே பாறைமேல் வைத்திருந்தான். இப்போது அவர்களை எதிர்கொண்டு பேசாதிருக்கும்படி எச்சரித்துவிட்டு, புகையிலைப்பை பற்றிக் கேட்டான்.

'மறந்து விட்டேன்! அருமை பெதோத் யெவ் கிராபிச், மறந்தே போனேன்!'

சார்ஜண்டு மேஜர் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்; அட பெண் இனமே, என்னதான் மறதி உனக்கு, உன்னைச் சைத்தான் பிடித்து ஆட்ட! நீ மட்டும் ஆணாய் இருந்தால் ஏழு தலைமுறைகளையும் வளைத்துத் திட்டி, எடுத்துவா பையை என்று திரும்ப விரட்டியிருப்பேனே இப்போதோ, புன்னகையை வலிந்து வரவழைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

'அட பரவாயில்லை என்கிறேன். நீ வருத்தப்படாதே. புகையிலைத்தூள் இருக்கிறது. என் சாமான் பையை மறந்து விடவில்லையே?'

சாமான் பை அதன் இடத்தில் இருந்தது. கமாண்டருக்கு வருத்தம் புகையிலை போனதால் அல்ல, புகையிலைப்பை போய் விட்டதால்தான். அது பரிசாகக் கிடைத்த பை. 'அன்புள்ள தாய் நாட்டுக் காவலருக்கு' என்ற சொற்கள் அதில் பின்னப்பட்டிருந்தன. ஆகவே வஸ்கோவால் தன் வருத்தத்தை மறைக்க முடியவில்லை. அதற்குள் சோனியா, 'இதோ கொண்டு வருகிறேன்! அது இருக்கும் இடம் எனக்குத் தெரியும்!' என்று வந்த வழியே திரும்ப ஓடினாள்.

'இந்தா, நீ எங்கே போகிறாய்? சோனியா? தோழர் மொழிப்பெயர்ப்பாளி?'

அவன் பேச்சைக் கேட்க அங்கே யாரும் இல்லை. சோடுகள் தொப்புப் தொப்பென்று அடிப்பதுதான் கேட்டது...

மின்ஸ்க் நகரில் இருந்த அவர்களுடைய சிறு வீட்டின் கதவில் 'டாக்டர் படடம் பெற்ற மருத்துவர் ஸாலமோன் அரோனவிச் குர்விச்' என்று பொறித்த செப்புப் பட்டயம் தொங்கியது. சோனியாவின் தகப்பனார் சாதாரணச் சிற்றூர் மருத்துவர் தாம். டாக்டர் பட்டம் பெற்றவர் அல்ல, என்றாலும் இந்தச் செப்புப் பட்டயம் தாத்தாவால் பரிசளிக்கப்பட்டு அவர் கையாலேயே மாட்டப்பட்டிருந்தபடியால் அதை ஒருவரும் கழற்றவில்லை. தாத்தா அதை மாட்டியதன் காரணம் அவருடைய மகன் கல்வித் தேர்ச்சி பெற்றவன் என்பதை மின்ஸ்க் நகரம் முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே.

அவர்களுடைய குடும்பம் மிகவும் ஒற்றுமையானது, மிகவும் பெரியது. குழந்தைகள், மருமக்கள், பாட்டி, அம்மாவின் மணமாகாத சகோதரி, இன்னும் யாரோ தூரத்து உறவுக்காரி, எல்லோரும் ஒரே வீட்டில் வசித்தார்கள். ஒருவர் மட்டும்



"ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலையை நாம் கோர வேண்டும். தெளிவற்ற வேற்றுச் சொற்களால் அல்ல; சோஷலிசத்தை அடையும்வரை தேசிய இனவிடுதலைப் பிரச்சினையைக் கீழ்நிலைக்கு ஒதுக்குவதன் மூலமாக அல்ல; தெளிவான, துல்லியமான அரசியல் திட்டத்தின் மூலமே கோர வேண்டும்,"

— லெனின்

படுத்த கட்டில் ஒன்றுகூட வீட்டில் இல்லை. மூவர் படுத்த கட்டில் இருந்தது.

பல்கலைக் கழகத்தில் பயிலும் போது கூட சோனியா தன் தமக்கைகளின் மாற்றித் தைத்த கவுன்களைப் போட்டுக் கொள்வாள். அவை கவர்ச்சி இன்றிக் கம்பிவலைக் கவசங்கள் போலக் கனக்கும். அவற்றின் கனத்தை அவள் நீண்ட காலம் உணராமலே இருந்தாள்.

அவற்றை அவள் போட்டுக் கொண்டது கொஞ்ச காலத்துக்குத்தான். ஒரே ஆண்டுதான். அதன் பின் இராணுவச் சீருடை அணியலானாள். சோடுகளும் அளவுக்கு மிகவும் பெரியவை.

படைப் பிரிவில் ஒருவருக்கும் அவளை அனேகமாகத் தெரியாது. அவள் இட்ட பணிகளை அடக்கமாக நிறைவேற்றி வந்தாள். அவள் விமான எதிர்ப்புப்படையினள் ஆனது தற்செயலாகவே. போர்முனை வலுவாகத் தற்காப்பு ஏற்பாடுகள் செய்து கொண்டு தாக்குதல் நடவடிக்கைகள் இன்றி இருந்தது. மொழிபெயர்ப்பாளர்கள் நிறைய இருந்தார்கள். ஆனால் விமான எதிர்ப்புப் படையினர் போதவில்லை. அதனால்தான் ஜெர்மன் 'மெஸ்ஸர்ஷ்மித்' விமானங்களோடு நடந்த சண்டைக்குப் பிறகு ழேனியாவுடன் சோனியாவும் கிரீயானாவின் படைப்பிரிவுக்கு அனுப்பப்பட்டாள்...

சோனியாவின் குரல் வஸ்கோவின் காதில் மட்டுமே பட்டது.

'குர்விச் கத்தினாள் போல இருந்ததே' என்று கேட்டான் சார்ஜண்டு மேஜர்.

எல்லோரும் உற்றுக் கேட்டார்கள்; குன்றுத்தொடர் நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது. காற்றுதான் சற்று சீழ்க்கை அடித்தது.

'இல்லை, உங்களுக்கு வெறுமனே தோன்றியிருக்கிறது' என்றாள் ரீதா.

பெருமூச்சுடன் முனகுவது போன்று தொலைவில் ஒலித்த குரல் மேற்கொண்டு கேட்கவில்லை. ஆயினும் வஸ்கோவ் புலன்களை எல்லாம் ஒருமுனைப்படுத்தி அதை மேலும் மேலும் உற்றுக் கேட்க முயன்றான். அவன் முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது. அந்த விந்தைக்கூக்குரல் அவனுக்குள் சிக்கிக் கொண்டுவிட்டது போலவும் இன்னும் ஒலித்துக் கொண்டிருப்பது போலவும் இருந்தது. அதன் பொருள் என்ன என்பதை வஸ்கோவ் ஊகித்துக் கொண்டான். தெரிந்து கொண்டான். அவன் உடல் சில்லிட்டது. உணர்வற்ற விழிகளால் நோக்கி, விந்தைக் குரலில் சொன்னான்:

'கமெல்கோவா, என்னோடு வா. மற்றவர்கள் காத்திருங்கள்'

(தொடரும்)

www.tamilarangam.net






குடும்பி மலை முதலை மலை
எங்கள் மலை என்றே
போர் முழங்கி
வாலிபனும் வயோதிபனும்
செந்நெற் கதிர் சாயும்
மண்காக்கப்புரிந்த சமர் நடுவே
மண்வெறி தலைக்கேறி
முன்பாய்ந்து போரிட்டு
குருதி உரம் ஊற்றி
சாய்ந்தான்
துறை நீலா வணையான்
பிள்ளையான் வீரமகன் தம்பி.
அவன் சாய்ந்த
நீள்வாய்க்காற் கரையோரம்
பூத்த ஒல்லி இதழ் ஒதுக்கி
நீர் அருந்தி
வந்தவன் நான்
இன்று
சென்னை நகர் வீதியிலே
முகம் தொலைந்து
வாடுகிறேன்.
மூங்கிலாற்றில் புதுவெள்ளம்
விடியலின் குளிர்மை கொண்டு
மண்நிறமாய்ப்
பாய்ந்தோட
அதுகண்ட பயணக்களை
மறந்து
சந்தோஷக் கூச்சலிட்டு
வில்லிறக்கி மருதமரத்தோரம்
துப்பாக்கி சார்த்தி
தொப்பென்று பாய்ந்து
தோழரோடு களித்திருந்தோம்
நேற்றிருந்தோம்.

எம் மண் மகளணைக்க
நேற்றிருந்தோம்.

சென்னை நகர்ச் சந்தடியில்
இருப்புத் தொலைந்ததென
இன்று வாடுகிறேன்.

வெறிநாய்
எதிரியின் சவால் ஏற்று
மாந்தரை ஆற்றுப்
படுக்கையில்
அகண்டவான் தாரகையின்
மெல்லொளியில் நடக்கையிலே
வீரமரணம் அடைந்த
தோழரின் நினைவுச்சின்னமே
வழிபடுவம் யாம் அன்றி
கோயிற் கடவுளர்
எமக்கில்லையெனச்
சூழுரைத்து
உயிர்கொடுக்கும்
மறத்தோழமையின்
அன்பெண்ணி இருள்வெளியில்
மௌனமாய்க் கண்பனிக்க
நடந்தோம் நாம்.

நேற்றிருந்தோம்
இன்றிரவு விநாயக சதுர்த்திக்
கோலாகல நடுவே
மாந்தரை ஆற்று மண்ணில்



வீழ்ந்த எம்மவரின்
வியர்வைத்துளி நினைந்து,
சென்னை நகர் வீதியிலே
நெஞ்சடைக்க வாடுகிறேன்.

என் வாழ்வின் ஊர் அறியா
இன்கணங்கள் தன்னகத்தே
புதையல் என இரகசியமாய்
மறைத்துவைத்து
எனக்கும் என் அருமைத்
தோழனுக்கும்
மட்டுமெனக் கதை சொல்லும்
பாதையது.

வழிநெடுக
தென்றலிலே கொன்றையம்
பொன் குலுங்கும் அடிவானம்;
மஞ்சளாயும், சிவப்பாயும்
மயங்குகையில்
புதர்ப்பக்கம்
காட்டுமல்லிப்பூச் சுடரும்.

## சிவராம்

தூரத்தே கீழ்வானத்
தாரகையாய்
மானுடத்தின் மீட்பு
எனும் பசுங்கனவு
நெஞ்சிலே பசுமையாய்
பரவிநிற்க
போரிட்டுப் போர்தழைக்க
குருதிஉரம் ஊற்றி
அக்காட்டுப் பாதையிலே
நம்பிக்கையோடு
விடுதலைப் பசுங்கனவின்
மென்பாரங் கொண்டு
என் உடலம் சாயட்டும்.

காடு பூக்கும் வசந்தமதில்
என் உடலம் சாயட்டும்.

சாய்ந்த என் உடல்மீது
மாலை இளந் தென்றலில்
அழகழகாய் ஆடிவீழும்
கொன்றைப்பூ சிலகவிய
என் ஆவி பிரியட்டும்
என எண்ணி அவ்வெண்ணம்
கண்ணிகளில் நீர் பெருக்க
சென்னை நகர் வீதியிலே
இருளில் நடக்கின்றேன்.

எம் இனிய மண்ணே!
என் ஜென்ம பூமியே!
என ஓடோடிச் சென்று
வீழ்ந்து எம் நிலமகளை
அரவணைத்து
மண்மடியை முத்தமிட்டு
எம்மண்பாடி விண்பாடி
பறந்து செல்லும் வானம்பாடி
என நினைந்து ஆயுதம் ஏந்தி
நிற்கும் நாளெண்ணி.

படித்தறியா எம் ஏழை
மக்கட்கு மடிந்த எம்
மறத்தோழரின் கதை சொல்லி
விளக்கொளியில்
குழந்தைகளும் புரிந்து
கொள்ளும் மொழி சுவைக்க
விடிவின் கதை சொல்லி
வாழ்ந்திருக்கும் நாளெண்ணி
சென்னை நகர் இரைச்சலிலே
குரல் அமுங்கி வாடுகிறேன்.

இதனால்
அடைக்கலம் தந்த தமிழகத்து
மண்ணே உன்மீது நான்
வெறுப்புற்றேன்
என நினையாதே
மண்நேசம் கற்கா
அரைகுறைக் காதலனாய்
சர்வதேசியம் பேசி
போலியாய்
உன் மடியை முத்தமிட
நான் விழையவில்லை.

மண்பாசம் கற்றுவர
மண்காதல் கற்றுவர
வீரமொழி பேசி
என்னை வழியனுப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இழப்பின் பெருமைகள்

- சிவம்

'கந்தசாமியற்றை பெடியனைக் காணேல்லையாம்' என்ற கவலை சேர்ந்த அங்கலாய்ப்பு சில முதியோர்களிடமும், 'என்ன மச்சான் கேள்விப்பட்டியே, உவன் கந்தசாமியின்ரை மோன் சிவகுமாரைக் காணேல்லையெண்கினம்... ஒருவேளை மற்றதிலை சேர்ந்திருப்பானோ?' என்ற பயத்துடன் கூடிய சந்தேகம் சில நடுத்தர வயதினரிடையேயும் கிளம்பிக் கொண்டிருந்த பொழுது 'டேய், உவன் சிவாவும் சேர்ந்திட்டானாம், அவன் உதிலை சேருவான் எண்டு எனக்கு முந்தியே தெரியும்' என்ற மகிழ்ச்சி கலந்த மறைமுகமான ஒரு பெருமிதம் சில இளவட்டங்களிடையே பரவிக் கொண்டிருந்தது.

இந்த மூன்றாவது ரகத்தினரிடையே தாமும் அதில் சேர்ந்து கொள்ள முடியவில்லையே என்ற ஓர் ஆதங்கமும், தங்கள் துணிவின்மை பற்றிய ஒரு வெட்க உணர்வும் ஓரளவு இருக்கத்தான் செய்தன.

கிராமத்தில் இந்தக் கதை மெல்ல மெல்லப்பரவிப்புகைந்து கொண்டிருந்தபோது சிவகுமார் வீட்டில் வலுத்த மௌனம் குடி கொண்டிருந்தது. கந்தசாமியர் அன்று காலை எழுந்த நேரம் முதல் ஈசிச்செயரில் மௌனமாக இருக்கின்றார். வழக்கம் போலவே உணர்ச்சிகளைக் காட்டாத அவரது முகம் நிர்ச்சலனமாக இருக்கின்றது.

வேளாவேளைக்கு வானொலிச் செய்திகளைக் கடன் வழிக்கு கேட்பதும், இந்திய வானொலியின் செய்திகளை அக்கறையோடு கேட்பதும் வழக்கம் போலவே அன்றும் அவரது நித்திய கடமைகளாக நடந்தேறி விட்டன. இப்போது மாலை நேரமாகி விட்டதால் 'அந்த' ஒலிபரப்பின் செய்திகளை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

கனத்த மௌனத்திரையின் கிழிசல்களினூடு மெல்லிய சிறு விசும்பல்களும், கண்ணீர்த்துளிகளும் இடையிடையே சிவகுமாரின் தாயாரிடமிருந்து கசிந்து கொண்டிருந்தன. இன்னும் நாலு வருடங்களின் பின் சிவகுமார் ஒரு பொறியியலாளராக வரப்போகின்ற அந்தக் கனவுக் காட்சி கரிபூசப்பட்டுச் சிதைவுற்றவண்ணம் அவளது மனக்கண்ணில் தெளிவுற்றுத் தெரிகின்றது.

பலூன் நிறைய உப்பியிருக்கும் காற்று சிறிய ஊசித் துவாரத்தினூடாக வெளியேறக் காத்திருப்பது போல, அவளுடைய துயரங்கள் அழுகை ஓலமாக வெளிவருவதற்குத் தயாராக ஒரு புறத்தூண்டலை நாடிக் காத்திருக்கின்றது.

மூத்த அக்கா இருவித மன நிலையில் தவித்தவாறிருக்கிறாள். அவளுக்கு ஓரளவு வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தாலும் கூட நாட்டின் நிலைமைகளையும் தனது இனத்தின் சூழ்நிலையையும் அடிப்படையாக் கொண்டு தனது தம்பி ஒரு நல்ல காரியத்தை—மிக அவசியமான காரியத்தைச் செய்திருப் திருப்பதாக ஒரு திருப்தியும், பெருமையும் அவளுக்கு இருக்கவே செய்தன. தாயின் கண்ணீர் அவளுக்கு ஓரளவு வெறுப்பையும் ஏற்படுத்தியது.

சிவகுமாரின் தங்கை தனது அண்ணன் போய்விட்டானே என்ற இழப்பின் வேதனையும், அம்மாவின் விசும்பல் தரும் கவலையும் அப்பா, அக்கா இருவரின் புரியாத மௌனங்கள் ஏற்படுத்தும் பயமும் சேர்ந்து திகைப்புற்றிருந்தாள்.

சிவகுமார் காணாமல் போன செய்தியைக் கேள்விப்பட்ட அனைவரிடையேயும் ஒரு சந்தேக நெருடல் முள்ளாக உறுத்தவே செய்தது. 'ஒருவேளை அறுவான்கள்தான் அவனை எங்கேயேன் பிடிச்சுக் கொண்டு போனாங்களோ?' என்பதே அந்த நெருடல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஆனால் கடந்த சில நாட்களாக 'அவங்கள்' இப்பகுதியில் நடமாடவில்லை என்பது நிச்சயமான செய்தியாக இருந்ததால் அவன் 'அதில்' தான் சேர்ந்திருக்க வேண்டும் என்பது ஊர்ஜிதமாகியது. கடந்த சில நாட்களாகவே அவன் பேசிய சில வார்த்தைகளின் உட்கருத்து அவன் குடும்பத்தினருக்கு அதை இப்பொழுது தெளிவாக்கிக் கொண்டிருந்தது. அத்தோடு முதல் நாளிரவு அவன் தனது நண்பனைத் தேடிப் போகும் போது அக்காவிடம் இது பற்றி ஒரு கோடி காட்டியிருந்தான் என்பதை அவள் இப்போதுதான் மெல்ல வெளியிட்டிருக்கிறாள்.

படலை தடதடக்கிறது. அப்பாவின் முகத்தில் ஓர் இறுக்கம், அம்மாவின் விசும்பலில் ஒரு சுருதியேற்றம். அக்கா உள்ளே திரும்புகிறாள். தங்கை படலையில் தன் விழிகளை மேய விடுகிறாள்.

அயலவர்கள் சிலரின் தயக்கமான வருகை. அந்த முகங்களில் காணப்படும் அந்தச் சோகம்... அவர்களாக வருவித்துக் கொண்டதா?...இழவு வீட்டிற்கு வருவது போன்ற பாவனை. இப்படித் தாங்கள் வருவதை இவர்கள் விரும்புவார்களோ என்னவோ என்ற தயக்கம் ஒருபுறம், மேலதிக புதினங்களைத் திரட்டலாம் என்ற ஆவல் மறுபுறம்.

ஏதோ பொழுது போக ஊர்ப்புதினம் பேசலாம் என்ற சாதாரண வெறுவாய் மெல்லும் வாயடிகள் சிலர். போகக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும் சம்பிரதாயத்திற்காக வந்தவர்கள் சிலர். நீத்தார் பெருமை பேசுவது போல சிவகுமாரின் பெருமையைப் பேச முற்பட்ட சிலர் கந்தசாமியின் மௌனத் திரையின் அர்த்தம் புரியாமல் மௌனமானார்கள்.

இரவுப் பொழுதும், ஊரங்கும் சேர்ந்து ஊரை அடக்கும் நோக்கத்திற்குப் பதிலாக வெறி நாய்களைக் கூடாரங்களுக்குள் பதுங்கச் செய்த அதே நேரம் துப்பாக்கி மட்டுமல்லாமல் இவற்றையும் ஏந்த நம்மால் முடியும் என்று இளைஞர் சிலர் பாதை திருத்தும் பணியை ஆரம்பித்தனர். 'புதிய பாதை'

# சிறுகதை

காணும் அவர்கள் சிதைவுற்ற பாதைகளைச் சீர்திருத்தும் நோக்கில் வீதியில் குழுமிய போது, இந்த வீட்டின் எட்டு விழிகள் வேலிக்குமேலால் அவர்களை நோட்டம் விட்டன. 'ஒருவேளை அவனும் இதில் நிற்பானோ' என்ற ஏக்கமே அதற்குக் காரணம்.

ஒருவரைப் பார்த்து ஒருவர் வந்து துக்கம் விசாரித்துக் கொண்டுபோக...இவர்கள் துயரம் அதிகரிக்க...கந்தசாமியின் மௌனம் இறுகிக்கிடந்தது. அவருடன் நெருங்கிப் பழகும் கனகரத்தினம் வந்து சேர்ந்தார். கந்தசாமியின் மௌனத்தை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

'என்ன கந்தசாமி செய்யிறது எல்லோருக்கும் கவலைதான். நீ ஏன் மனதுக்கை வைச்சுக் குமையிறாய், வாய் விட்டுக் சொல்லி ஆத்த வேணும். உது உடம்புக்குக் கூடாது கண்டியோ?' என்று உபதேசம் செய்யத் தொடங்கினார்.

விறுக்கென நிமிர்ந்த கந்தசாமியரின் கண்கள் கக்கிய தீயில் அங்கு நின்றிருந்த யாவரும் கலங்கினர். மௌனம் தனக்கு முற்றுப்புள்ளியை வைத்தது.

'என்ன காணும் விண்ணாணக் கதை கதைக்கிறீர், இப்பென்ன இஞ்சை இழவு நடந்து போச்சுதே? நான் எதுக்கு வாய்விட்டுப் புலம்ப வேணும்? எல்லாரும் இஞ்சை வெளிக்கிட்டு வந்திட்டினம் துக்கம் விசாரிக்க. அவன் என்ன செய்யக்கூடாத காவாலித்தனத்தையே செய்திட்டான். வயசுக்காலத்திலை எனக்கொரு பெருமையைத் தேடித் தந்திட்டல்லோ போயிருக்கிறான்...'

'ஆரேன் போராடிக் கொண்டு வந்து 'இந்தா அண்ணை சுதந்திரம்' எண்டுதர அலுங்காமல் அனுபவிக்கிறதுக்குக் காத்திருக்கிறம் நாங்கள், இது எவ்வளவு காலத்துக்கு? நான் ஒரு தியாகியை, ஒரு வீரமகனைப் பெத்தெடுத்தன் எண்டு பெருமைப்படுகிறது உங்களுக்குப் பிடிக்கல்லையே? ஒடுங்கடா எல்லாரும்...'

சிம்மகர்ச்சனையைக் கேட்டுச் செவிகளை மடக்கியபடி முயல்கள் வெளியேறுகின்றன. தெருவில் வேலை செய்த இளம் சிங்கங்கள் சில என்ன பிரச்சினை என்று எட்டிப்பார்க்க—இரண்டொரு 'பொடியள்' விஷயம் புரிநது உள்ளே வந்து புன்னகை சிந்துகிறார்கள். அன்று முழுவதும் புகையாத அடுப்பு அந்தப் 'பெடிய'ளுக்குத் தேனீர் தயாரிப்பதற்காகப் புகைய ஆரம்பிக்கின்றது.

# மங்காமல் பணிபுரிவேன்!

பிரிவு எனும் துயர்வந்து
எனைப்
பிழிந்தெடுத்த போதினிலும்
பிறந்தமண் காத்திடவே
பிரிந்திட்டேன்,
கவலை மற!

வசந்தகாலக் கோலங்களை
வஞ்சித்த காடையர்கள்
வஞ்சத்தைத் தீர்த்திடவே
வந்திட்டேன் களத்திற்கு!

முறையாகப் பயிற்சி பெற்று
முன்னேறிச் சென்று நானும்
மொசாட் கூட்டத்தினை
முதுகுகாட்டச் செய்திடுவேன்!

கற்றவித்தை கொண்டு
போர்க் களத்தினிலே குதித்து
கன்னித் தமிழ் மண்ணைக்
காத்திடுவேன்
உயிர் கொடுத்து.


வீரப்பரம்பரையில்
விளைந்த நல்வித்தாக
விரைந்திடுவேன் தாயகமே
வீணே ஏன்
கலங்குகிறாய்.

மனமெனும் மேடையிலே
மானமிகும் தமிழர்களின்
மறத்தமிழ் வீரம் காக்க
மங்காமல் பணிபுரிவேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# இரண்டாம் உலகப் போரில் கெரில்லாக்களின் பங்கு

- கோகுல்

இரண்டாம் உலகப் போரின் வெற்றியில் கெரில்லாப் படைகள் கணிசமான பங்காற்றியுள்ளன. புரட்சிப் படைகள் என்றும் கட்சியின் படைகள் என்றும் பரவலாகக் கூறப்பட்ட இவ்வகைத் துருப்புக்களே IIம் உலகப்போரின் நேசநாடுகளின் வெற்றிக்கு மிக முக்கிய காரணமானவை. இத்துருப்புக்கள் மக்களை பாசிச எதிர்ப்பில் ஊக்குவித்து எதிரியின் வெற்றிகொள்ளப்பட்ட பிரதேசங்களில் பணியாற்றினர். நவம்பர் 1870 ஆம் ஆண்டு கெரில்லாப் படைகளின் முக்கியத்துவத்தை எங்கல்ஸ் குறிப்பிடுகையில் 'அமெரிக்க சுதந்திரப் போரில் இருந்து உள்நாட்டு போர் வரையிலும் ஐரோப்பாவில், போரில் மக்களின் பங்கெடுப்பு இன்றியமையாததாக இருக்கிறது' என்கிறார்.

IIம் உலகப் போரின்போது பாசிச சக்திகளான ஜெர்மனியும், இத்தாலியும், ஜப்பானும் கெரில்லாப் படைகளைச் சட்ட விரோதமானதும், கொள்ளைக்காரப் படைகளாகவும் கருதினர். IIம் உலகப் போரின்போது சரியான அமைப்புடன் போராடிய கெரில்லாப் படைகளின் ஆதிக்கம் மேற்கில் பிரான்சு முதல் கிழக்கில் சீனா வரை பரவி இருந்தது. இங்கு அரசுப் படைகளுடன் பக்கபலமாகப் போராடிய கெரில்லாப் படைகளின் வளர்ச்சி மக்களின் முற்போக்குச் சிந்தனைகளின் தன்மைகளை எடுத்துக்காட்ட உதவியது.

1941, ஜூலை 3ம்திகதி ஜெர்மனியின் ரஷ்ய வெற்றிக்குப் பதினொரு நாட்கள் கழித்து ஸ்டாலின் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். 'எதிரிகள் ஆக்கிரமிப்புக்குப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கெரில்லாப் படைகள் நிறுவப்பட வேண்டும். எல்லா இடங்களிலும் கெரில்லாப்படைகள் போராடக் குழுக்களை அமைக்க வேண்டும். பாலங்களும், சாலைகளும் தகர்க்கப்படவேண்டும், தந்தி, தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்படவேண்டும். காடுகள் எரிக்கப்படவேண்டும். எதிரிகள் வாழ்விற்கு எதிரான பயங்கரமான நிலைமையை உருவாக்கப்படவேண்டும். எதிரிகள் வேட்டையாடப்பட்டு அழிக்கப்படவேண்டும்' என்றார் ஸ்டாலின்.

மக்களால் பெரிதும் தெரிந்தெடுக்கப்பட்ட கெரில்லா இயக்கங்களின் தலைவர்கள் கம்யூனிஸ்டுகளாகவே இருந்தனர் என்று சரித்திர சான்றுகள் கூறுகின்றன. கெரில்லாப்படைகளுக்கு அஞ்சாத நெஞ்சுரமும், எடுத்த காரியத்தில் கவனமும், குறிக்கோளில், பக்தியும் ஒழுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கமும் முதலாளித்துவத்தின் மீதான துவேசமும் தேவைப்பட்டன. அரசியல் வாழ்வில் காவல் துறையின் அடக்கு முறைகளில் வாழ்ந்து பழக்கப்பட்ட கம்யூனிடுகளுக்கு இவ்வித மான தன்மைகள் இயற்கையாகவே வாய்த்து இருந்தது.

பொதுவாக ஒரு தேச அமைப்பாகச் செயல்பட்ட இப்படைகளில் பாசிச எதிர்ப்பு உணர்வுள்ள எல்லா மக்களும் சேரத் தகுதியானவர்கள் ஆனார்கள். விவசாய, தொழிலாள வர்க்கத்தினர் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட இப்போரில் கம்யூனிஸ்டுகளின் முயற்சியால் தீவிரமாகப் போராடுவது என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது. கெரில்லாப் படைகளுக்கு தீவிரமாகத் தலைமையேற்றப்பட்ட கம்யூனிஸ்டுகளின் 1940ன் மேதின அறிக்கை தொழிலாளத் தோழர்கள் தங்களின் தொழிலாள மற்றும் தேச கடமைகளை நிறைவேற்ற உறுதி பூணுவார்கள். ஒவ்வொரு துளி சக்தியும், திறமையும் எதிரிகளின் போர் உற்பத்தியையும் துருப்புக்களின் போக்குவரத்தையும் முடக்கப் பயன்படுத்துவார்கள்' என்று கூறுகிறது.

கம்யூனிஸ்டுக் கட்சியும், அதன் இளம் தோழர்களும் இவ்வித மான கொள்கைகளைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வரப் பாடுபட்டார்கள். ஜெர்மனி, இத்தாலி பாசிச சக்திகளின் முழு தோல்விக்கு முக்கிய காரணமாகிய இக்கெரில்லாப் படைகள் போருக்குப் பின் பல நாடுகளில் தேச விடுதலைப் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டன. இப்படைகள் போருக்கு பிற்கால அரசியல் அமைப்புக்கு பலமாக உதவின.

### ரஷ்ய கெரில்லாக்கள்:

அரசியல் கொடுங்கோலர்களையும், ஜெர்மானியர்களையும் எதிர்த்துப் போராடிய விவசாயிகளின் வெகுஜனப் போராட்டங்களால் ரஷ்ய மக்களுக்கு கெரில்லாப் போர் முறையில் ஒரு பாரம்பரியமே இருக்கிறது. 1918—21களில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களில் தீவிரமாகப் போராடிய கெரில்லாப் படைகளுக்கு ஹிட்லரின் படைகளை வென்று எடுப்பது ஒரு புதிய காரியமாயின. ஸ்டாலினின் கெரில்லாப் போர்முறை அறைகூவலுக்குப் பின் ஐரோப்பாவில் இவ்விதமான போர் முறைக்குப் பலமான ஆதரவு ஏற்பட்டது.

கூட்டுப் பண்ணை அமைப்புக்கள் கெரில்லா அமைப்புகளுக்குத் தகுந்தவாறு அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பண்ணையும் கெரில்லாப் போர்முறை அமைப்புக் கேந்திரமாயின. ரஷ்ய மக்களின் இயற்கையிலேயே அமைந்த கூட்டு உணர்வு இவ்விதமான அமைப்புக்களின் வேகமான வளர்ச்சிக்கு உதவின. முதலாளித்துவ அமைப்புக்களால் இவ்விதமான தீவிர அமைப்புக்களை உருவாக்கிட முடியவில்லை. ரஷ்யப் படைகளுடன் இணையாகப் போராடிய இப்படைகள் 1942ல் லெனின்கிராடை ஒட்டிய 3000 சதுரகிலோமீட்டர் பகுதிகளை நிர்வகித்தன. இப்படைகளே நாஜிப் படைகளால் சூழப்பட்ட ரஷ்யத் துருப்புக்களுக்குத் தளவாடங்களும் உணவுப் பொருட்களும் கிடைக்க வழி செய்தன.

கெரில்லாப் படைகளால் பாசிச சக்திகளுக்குப் பலமான சேதங்கள் ஏற்பட்டன. ரயில் தடங்களும், சாலைகளும், பாலங்களும் தொலைபேசி இணைப்புகளும் தகர்க்கப்பட்டன. இவைகளை சரிசெய்யவே நாஜிப் படைகள் தங்களின் துருப்புக்களைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. பைலோ-ருஷ்யா (Byelorussia) பகுதியில் மட்டும் கெரில்லாப் படைகளால் 150,000 ஜெர்மன் துருப்புக்கள் கொல்லப்பட்டனர். இவ்விதமாக ஒவ்வொரு போர்முனையிலும் ஜெர்மன் துருப்புக்கள் பலத்த சேதமடைந்தார்கள்.

நாஜித் துருப்புக்களின் மனதில் பயங்கரப் பீதியைக் கிளப்பிய ரஷ்யக் கெரில்லாக்கள் பற்றிக் கைப்பற்றப்பட்ட ஒரு ஜெர்மன் காப்டன் கடிதம் கூறுகிறது. 'அவர்களைச் சபிக்க வேண்டும். இதற்கு முன் இப்படி ஒரு அனுபவத்தை நான் அனுபவித்தது இல்லை. காடுகளிடையே முகமூடிகளுடன் போர் செய்ய முடியாது. இதை நான் எழுதும் போது சுற்றும்முற்றும் பார்த்துக் கொள்கிறேன். நடுங்குகிறேன். இதை நினைக்காமல் இருப்பதே நல்லது. இரவு வருகிறது. இருட்டின் ஊடே நிழல்களின் நடமாட்டத்தை நான் உணர்கிறேன். என் இதயம் சில்லிடுகிறது'

ஆனாலும் கெரில்லாப்படைகளை அழிக்க ஜெர்மனி பலவித முறைகளைப் பயன்படுத்தின. ஏதோ ஒரு கெரில்லா வீரன் ஒரு கிராமத்தில் பிடிபட்டால் அக்கிராமத்தையே எரித்து விடுவார்கள். அக்கிராமத்தின் மக்களின் பாதிப்பேரை பிணையாளிகளாக அழைத்துச் சென்று கொல்வார்கள். இவ்விதமான பயமுறுத்தல்களால் சோவியத் மக்களின் உணர்ச்சிகளை மட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு உயர்ந்த நிலையிலான சோவியத் சமூக அமைப்பையும் முறைகளையும், கெரில்லாப் போர் வீரர்களின் வீரம் செறிந்த தாக்குதல்களையும் சரியாக கணிக்கவியலாது ஹிட்லர் படைகள் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

### ஐரோப்பியக் கெரிலாக்கள் :

கிழக்கு ஐரோப்பாவில்ரஷ்யத் துருப்புக்களின் மற்றும் கம்யூனிஸ்டுகளின் ஆதரவு பெருகி இருந்தாலும் கெரில்லாப் படைகளுக்கும் மிகப் பலத்த ஆதரவு இருந்தது, கிரீஸ் யூகோஸ்லாஸ்வியா, போலந்து, செக்லோஸ்கியா, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி போன்ற நாடுகளில் கெரில்லா அமைப்புக்களைப் போரில் ஆரம்பகாலக் கூட்டத்திலே கலந்து கொண்டார்கள். அவைகள் நாடுகளில் சுதந்திரப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றினார்கள். எல்லா நாடுகளிலும் இக் கெரில்லா அமைப்புக்கள் நாடு தழுவிய அமைப்பாகவே இருந்தன. முக்கியமாக கிரீஸ் நாட்டில் விவசாய, சோசலிஸ சுதந்திர— இளைஞர்கள் தொழிலாளிகளின் அமைப்புகளும் மேலும் சில குருமார்களும் சில குறிப்பிட்ட அரசர்களும் இவ்வமைப்புக்களில் பங்கு வகித்தார்கள்.

### மேற்கு ஐரோப்பிய புரட்சிப்படை :

பாசிசச் சக்திகளின் ஆதிக்கத்தில் இருந்த நோர்வே, டென்மார்க். பெல்ஜியம் ஹாலண்டு, ஸ்பெயின், இத்தாலி, பிரான்சு போன்ற நாடுகளிலும் முழு அமைப்புடன் புரட்சிப் படைகள் இயங்கி வந்தன. சில சந்தர்ப்பவாதச் சோசலிஸ்டுகளினாலும், குட்டி முதலாளிகளாலும் இவ்வமைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் தீவிரத்தன்மை மட்டுப்பட்டாலும், கம்யூனிஸ்டுத் தோழர்களின் தலைமையால் இவ்வமைப்புக்கள் பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடின. நேசநாடுகளின் அரசுகளும் இவ்வகை அமைப்புகளின் தன்மையையும், தரத்தையும் அறிந்து பொருளும், ஆயுதமும் கொடுத்து உதவின.

## இத்தாலியில் புரட்சி

இத்தாலியில் 20 ஆண்டுகாலமாகவே கம்யூனிஸ்டுக் கட்சியினர் பாசிசச் சக்திகளோடு போராடி வந்தனர். அதில் கட்சியின் தலைவரான அந்தோனியோ கிராம்சியும் மற்றொருவரும் அழிந்தனர். முசோலினியினால் கொல்லப்பட்ட அரசியல் கைதிகளில் 85°/. கம்யூனிஸ்டுகள். 1943 மார்ச் மாதத்தில் வடக்கு மாகாணங்களிலும், மிலான், துரின் போன்ற நகரங்களிலும் தொழிலாளர்கள் பொதுவேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். அதில் 3000,000 தோழர்கள் கலந்து கொண்டார்கள். இது ஏப்ரல் மாதங்களில் நாடுதழுவிய போராட்டமாக வெடித்தது அதே ஆண்டு ஜூலை மாதம் முசோலினி கட்டாயமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார். 1945ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள் தொழிலாளத் தோழர்களால் அவர் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டார். பாசிச இத்தாலியின் தோல்வியில் கெரில்லாப் படைகளின் பங்கு உன்னதமானது.

## பிரான்சில் புரட்சிப் படை

பிரான்சில் பலமாகச் செயல்பட்ட கம்யூனிஸ்டுகளால் புரட்சி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. தலைமறைவாக செயல்பட்ட இவர்களால் சுரங்கத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டது. இவர்களால் நாஜிப் படைகளின் போக்குவரத்தும், ஆயுத உற்பத்தியும் நாசம் செய்யப்பட்டது. பிரான்சிலும் புரட்சிப் படைகளுக்கு கம்யூனிஸ்டுகளே தலைவர்களாகச் செயல்பட்டனர், 1944ல் கம்யூனிஸ்டுகளாகளாலும், டிகாலி போன்றவர்களாலும் தேசிய எதிர்ப்புக் குழு தொடங்கி வைக்கப்பட்டது. டிகால் போன்றவர்கள் அரசியல் அமைப்புகளால் எதிர்ப்பு குழுவினைக் கட்டுப்படுத்த ஆரம்பித்தாலும் கம்யூனிஸ்டுத் தோழர்களின் விடாமுயற்சியால் ஆயுதப் புரட்சி தொடர்ந்து நடைபெற்றது. இந்தப் பாசிச எதிர்ப்பில் 7500 கம்யூனிஸ்டுத் தோழர்கள் கொல்லப்பட்டனர். கொரிலாக்களின் முதல் நேரடிப் போர் சேவாய் என்ற இடத்தில் பின் மத்திய பீடபூமியில் தொடர்ந்தது. தளபதி ஐசன்ஹோவர் கூறினார். 'பிரான்ஸ் புரட்சிப் படைகள் பதினைந்து டிவிசன் படைகளுக்கு இணையானவை'' என்று 1944ல் 500000 புரட்சி வீரர்கள் எதிர்ப்புக் குழுவில் பணியாற்றினார்கள். இதில் பெண்களும் இருந்தனர். பிரான்ஸ் விடுதலை அடைந்ததற்கு அந்நாட்டின் புரட்சிப் படைகளே முக்கிய காரணமானவை.

## சீனாவில் கெரிலாக்கள்

எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்குச் சீனாவில் கெரில்லாப் படை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த படையாக இருந்து வந்திருக்கிறது. அது அந்த நாட்டிற்கே உரித்தான ஒரு போர் முறையாகும். சியாங்கே சேக்கின் சதியினால் 1927ம் ஆண்டு விளைந்த உள் நாட்டுப்போரில், கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து கெரில்லாப் போர் நடத்தி வந்தனர். பின்னர் அளவில் பெரிதாய் இப்படையே உருவெடுத்து ஜப்பானின் ஆக்கிரமிப்புப் படையினருக்கும், சியாங்கே சேக்கின் கூலிப் படைகளுக்கும் எமனாய் விளங்கின. இவ்வாறே பிலிப்பைன், பர்மா, இந்தோசீனா, இந்தோனேஷியா மற்ற நாடுகளிலும் கெரில்லாப் படை அமைப்புகள் உருவாகத் தொடங்கின.

இவ்வித அமைப்புகளில் முக்கியமாக விவசாயிகளே வீரர்களாக இருந்தனர். இளம் கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்களின் பங்கு இந்த அமைப்புகளில் புகழ் வாய்ந்தது. பெண்கள், வயதானவர்களும் இவ்வமைப்புகளில் சேர்ந்திருந்தார்கள். இந்தக் கெரிலாக்கள் எதிரியுடன் போரிடுவது மட்டும் இன்றி விவசாயிகளுக்கு அவர்களின் பண்ணையில் உதவி செய்ய ஆரம்பித்தார்கள். மக்களுக்குத் தொண்டாற்றிய அவர்கள் மக்களை ஒரு சரியான அரசியல் அமைப்புக்குத் தயார் செய்தனர். விவசாயிகள் மத்தியில் ஒரு புரட்சித் தலைவர்களை உருவாக்கும் அரசியல் பள்ளிகளாகப் பணியாற்றினார்கள்.

சியாங்கே சேக்கில் அரசுத் துருப்புகளின் மிகுந்த ஆயுதப் பலத்தாலும் எண்ணிக்கையாலும் சீனாவின் மக்கள் கெரில்லாப் படைகளை எதிர்கொள்ள ஜப்பானால் முடியவில்லை. கெரில்லாப் படைகள் எதிரிகளின் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களால் இரவில் இருட்டில் தாக்கியும், எதிரிகளின் போக்குவரத்துச் சாதனங்களைத் தகர்த்தும் முன்னேறினார்கள். நகரங்களும், பெரிய சாலைகளும் எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானாலும், கிராமப்புறப் பகுதிகளிலும் இவர்களே போரில் வெற்றி அடைந்தனர். சியாங்கே சேக் படைகளின் எதிர்த்தாக்குதலான கிராமங்களை எதிர்ப்பதும், விவசாயிகளைக் கொன்று குவிப்பதுமான ஜப்பானின் கொடுமையை சீன மக்களின் உணர்ச்சியையும் புரட்சியின்பால் அவர்களுக்கு உள்ள புரிந்துணர்வையும் மழுங்கடிக்க முடியவில்லை. ●

## சுட்டெரிக்காதோ?

★ வேலூர் S. K. M. S.

என் இனியவனே!
எங்கே உனை
அந்தச் சண்டாளர்
அடைத்துளரோ
அங்கே எனை அழைத்துவிடு.
நீ மட்டும் அங்கு
ஈனர்களால் வதைக்கப்பட
நானும் ஒரு பெண் என
இவ்வுலகில் வாழ்வதா?
ஆடுகின்றேன் நான்
மேடையில்லா நாடகம்
பெற்றவர்கள் வருந்தாமல்
பொழிகின்றேன் புன்னகை
உடன்பிறப்புகள் கலங்காமல்
உண்கின்றேன் உணவதனை
ஆனாலும் என் நெஞ்சில்
அசையாத ஒரு நம்பிக்கை.
போனாலும் பல ஆண்டுகள்
வீண் போகாது என்
வேண்டுதல்
தீயாகம் பொங்கிடும்
என் கண்ணீர்
தீனர்களின் உடலதனைச்
சுட்டெரிக்காதோ.
ஆனாலும்
போராடிப் போராடிக்
காத்திருப்பேன் நான் உந்தன்
விடுதலை நாளை எண்ணி...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏனம்மா அழுதுகொண்டிருக்கிறாய்..?

★ எஸ். அரசிளங்கோ

புலர்ந்தும் புலராத
பொழுதுகளை எண்ணி — நீ
அழுது கொண்டிருப்பது
எனக்குத் தெரியாதா...
ஏனம்மா
பொய் சொல்கிறாய்...?

எதற்காக...
கண்களைத் துடைக்கிறாய்...?
உன்
ஏக்கப் பெருமூச்சால்
எப்போதோ — அது
உலர்ந்து போய்விட்டது.

உன்
இதயம் அழுதுகொண்டிருப்பது
எனக்குக் கேட்கிறதம்மா...
அதனால்தான் சொல்கிறேன்
நீ
பொய் சொல்கிறாய் என்று!

பயிற்சிப் பாசறையில்...
இரண்டாண்டு காலமாக(ப்)
புரண்டுகொண்டிருப்பேன்,
பல இன்னல்களில் என்று!
விம்மிக் கொண்டிருக்கிறாயா?

அல்லது...
மீண்டும் என்
குலக்கொழுந்தை
காண்பேனோ என்ற
ஏக்கத்தால்
குமுறிக் கொண்டிருக்கிறாயா?

சொல்லம்மா...

கோழை என்று —
பழித்துரைக்கப்
போகிறார்கள்,
பார்ப்பவர்கள்!

வீரமறத் தமிழ்க்குலத்தில்
விளைந்த உன் நெஞ்சால்
அபார வீரத்தை...
நீசமற நீ கலந்து
பாசமுற எனக்(கு) ஊட்டி...

புரட்சிப் பூக்களை(ப்)
பாட்டில் வடிக்கின்ற
பாவலனாய் ஆக்கிவிட்டு
ஏனம்மா... இன்னும் நீ —
பொருமிக்கொண்டு
இருக்கிறாய்...?

ஓ!...
கயவர்களின் வெறியாட்டம்
காலத்தால் தொடர்வதினால்
காளை இவன் இன்னும்
களத்திற்கு வரவில்லை
என உணர்ந்து
கலங்கிக்கொண்டிருக்கிறாயா?

கவலை விடம்மா...
காலை வைத்துவிட்டேன்.
களம் நோக்கி!
காவியம் ஒன்றினைக்
கையெழுத்தில் போட்டுவிட்டு
முடிவுரையை எழுதுவதற்கு
துப்பாக்கி தூக்கிவிட்டேன். ●



★ நூல் விமர்சனம்

# பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்

● ஞாநி

வேறெந்த எழுத்து ரீதியான படைப்பு வடிவத்தையும் விடத் தமிழில் கவிதை என்பதே பெரிதும் சீரழிக்கப்பட்டதாய் இருக்கிறது. தமிழ் நாட்டுக் கவிதையுலகோடு ஒப்பிடுகையில் ஈழத்து நிலைமை சற்றே மேலானதாய் இருக்கலாமெனினும் இந்தப் பொதுவான நிலைமை எங்கும் ஒன்றே.

யாப்பிலக்கணத்திற் கடங்கிய மரபுக்கவிதை கவிஞர்களிடமிருந்து பண்டிதர்கள்வசம் சென்று சிக்கியபோது ஏற்பட்ட கவிதைச் சீரழிவு புதுக்கவிதையின் வரவினால் முற்றிலும் சரியாகிவிட்டதாகச் சொல்ல முடியாதுதான். ஏனென்றால் யாப்பை யந்திரபூர்வமாகப் பயன்படுத்திய பண்டிதருக்கும் கவிஞனுக்கும் எப்படிச்சம்பந்தம் கிடையாதோ அதேபோலப் புதுக் கவிதையைத் திசைதிருப்பிச் சென்ற பாமரருக்கும் கவிஞனுக்கும் சம்பந்தம் இல்லை. புதுக்கவிதையின் வலிமை அதன் எளிமைதான். ஆனால் எளிமையின் அடிப்படைகள் பாமரத்தனம் அல்ல. அறிவின் விளைவால் வருவது எளிமை. அறிவின்மையின் வெளிப்பாடே பாமரத்தனம்.

மரக்கவிதையையும் புதுக்கவிதையையும் எல்லாக் காலத்திலும் கவியுள்ளம் கொண்ட படைப்பாளிகள் பயன்படுத்தியபோதே அவை அவற்றுக்குரிய முழு ஆகிருதியோடு வெளிப்பட்டிருக்கின்றன.

ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளில் இப்படித் தமிழ்க் கவிதையைக் கையாண்ட பதினொரு கவிஞர்களின் 55 கவிதைகளை எம்.ஏ, நுஃமானும் அ. யேசுராசாவும் 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்ற தொகுப்பில் (க்ரியா வெளியீடு. விலை 20. பக் 216.) அறிமுகப்படுத்துகிறார்கள்.

நூலின் அறிமுக உரையில் இந்தக் கவிதைகளைத் தலைமுறை வகையில் பிரித்துச் சொல்லியிருக்கிறது. மஹாகவி முதல் தலைமுறை. முருகையனும் நீலவாணனும் 2ம் தலைமுறை, மு. பொன்னம்பலம், எம்.ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், தா. ராமலிங்கம் 60களில் எழுதத் தொடங்கிய மூன்றாம் தலைமுறையினர். நான்காம் தலைமுறைக்காரர்கள் சி.சிவசேகரம், அ. யேசுராசா, வ.ஐ.ச. ஜெயபாலன் ஆகியோர் சேரன் ஐந்தாம் தலைமுறையின் பிரதிநிதியாகிறார்.

இந்தப் பதினொரு கவிஞர்களின் படைப்புக்களிலும் கவிதைஉருவம் மாறுபட்டபோதும் பொது அம்சமாகத் திகழ்வது அவர்களின் சமூகச்

www.tamilarangam.net

சார்பு என்று சரியாகவே அறிமுக உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமூகச் சார்பு என்பது தமிழ் இலக்கியச் சமூகத்தில் மிகவும் அவதிக்குள்ளாக்கப்பட்ட சொற்றொடராகும். தனிமனிதனின் மனவியாகூலங்கள், சமூக அக்கறைகள் இரண்டும் எப்போதும் ஒன்றையொன்று எதிர்ப்பனவாகவும் ஒன்றை ஆதரிப்பவர்கள் மற்றதன் எதிரிகள் என்பதாகவுமே பலரும் நினைத்து வந்துள்ளனர். இந்த அடிப்படையில் இலக்கியச் சர்ச்சைகளும், முற்போக்கு-பிற்போக்கு ஆராய்ச்சிகளும் நிகழ்ந்து வந்திருக்கின்றன.

தனிமனிதனும் சமூகமும் எதிரிகளல்ல. ஒன்றில்லாமல் மற்றதில்லை என்ற ரீதியில் சார்ந்து நிற்பவையே. தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையே முரண்பாடுகள் உண்டுதான். ஒவ்வொரு காலத்திலும் இந்த முரண்பாடுகள் இருந்தே வந்திருக்கின்றன. ஆனால் இந்த முரண்பாடு பகைமுரண்பாடன்று. நட்பு முரண்பாடே என்பதனாலேயே இவற்றின் விளைவால் சமூகமும் மனிதனும் மேலும் செழுமை பெறுதல் சாத்தியமாகியிருக்கிறது. தனிமனிதனை ஒதுக்கிய சமூக அக்கறை சாரமற்றது. சமூகத்தை நிராகரிக்கிற தனிமனிதவாதம் வெற்றுவெளியில் ஜீவிக்கவியலாத தற்கொலைத் தன்மையிலானது.

இந்தத் தெளிவுள்ள கலைஞனே தன் படைப்பால் சமூகத்தையும் மனிதனையும் வெளிப்படுத்த முடிகிறது.

இந்தத் தெளிவை இந்தத் தொகுப்பின் பதினொரு கவிஞர்களின் படைப்புக்களும் வெளிப்படுத்துகின்றன. சில நல்ல உதாரணங்களாக நுஃமானின் 'தாத்தாமாரும் பேரர்களும்' சண்முகம் சிவலிங்கத்தின் 'ஆக்காண்டி', யேசுராசாவின் 'சூழலின் யதார்த்தம்' மஹாகவியின் 'தேரும் திங்களும்' முருகையனின் 'வேலியும் காவலும்', நீலாவாணனின் 'பாவம் வாத்தியார்', பொன்னம்பலத்தின் 'தரிசனம்', வ.ஐ.ச. ஜெயபாலனின் 'கன்னியா குமரியில் ஒரு கவிதைப் பொழுது', சேரனின் 'கானல்வரி' ஆகியவற்றைச் சொல்லலாம்.

இந்தத் தொகுப்பில் உள்ள பல கவிதைகளை காலம் கரைத்துவிடலாம்; ஆனால் இந்தக் கவிதைகள் அவற்றை எழுதிய கவிஞர்களின் பிரமாண வாக்குமூலங்களாக இந்த நிமிடத்தில் தொனிப்பதே அவற்றின் வெற்றி. நிகழ்காலத்துக்கு சாட்சி கூறுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் படைப்பாளிகளுக்கு அதைமீறிய அபிலாஷைகளும் இருக்கமுடியாதுதான்.

குமரித்தாயே
அண்டை வீடு எரியும்போது
சோம்பல் முறிக்கும் இந்திய
சனங்களின் குமரித்தாயே
தென்றல் கரத்தால்
என் கண்ணீர் துடைத்தனை
நான் ஒருவனும் அல்லன்
ஒருவன் நானுமல்லன்.

ஜெயபாலனின் இந்த வரிகள் தோற்றுவிக்கும் உணர்வு இந்தத் தொகுப்பில் பல படைப்புக்களிலும் காணப்படும் உணர்வின் ஓர் உதாரணமே. ●



# நாளை ஓர் உலகம்



கலக்கம் விடு தோழா
கண்டிடுவோம் தமிழீழம்
உறக்கம் துற தோழா
உதித்திடும் நம் ஈழம்.

சுட்டாலும் என்ன
சிறையிட்டாலும் என்ன
பொய்க்காது
நம் எண்ணம்
பொய்யில்லை
இது திண்ணம்.

தேன் மொழியாம்
நம் தமிழை
தீயிலே இட்டாரரோ
அது
தீர்ந்திடுமென்று
நினைத்தாரோ!

கிட்டாது போகாது
காத்திருந்த தமிழீழம்.
விட்டோடிப் போய்விடுமே
விரைவில்
நம் இன்னல்கள்.

நாளை ஓர் உலகம்
அதில்
நாளும் இன்பமயம்
வானம் அது நாளும்
மழை காவும் — சோலை
வனம் போலே
ஈழம் இனி மாறும்.

ஏழை என்றொரு
ஜாதிதனை — நாம்
எங்கே என்று தேடிடுவோம்
சாதி, மதம் என்னும்

மாயைதனைச் சாடி
ஒழித்திடும் நாளும் வரும்.
தெருவினிலே இனி வீடில்லை
திருடர் என

ஒரு பிரிவு இல்லை.
பசியதனை
அவர் அறிவதில்லை:
பழையதுயர்
அவர் வாழ்வில் இல்லை.

சமத்துவம் என்ற
நிலைதனையே
சமைத்தவர் நெஞ்சம்
மகிழ்ந்திருக்கும் — அவர்
கண்களில் வீசும்
புத்தொளி தன்னில்
கதிரவன் கூட
மயங்கிடுவான். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதி முகாம்களை நோக்கி

கடந்த 7.8.85 அன்று காலை 9.30 மணியளவில் சென்னை மாநகரில் கல்விகற்கும் இலங்கைத் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் இலங்கையிலுள்ள சிங்கள இனவெறியர்களினதும் அவர்களது பாசிச அரசாங்கத்தினதும் 'கொடுமைகளுக்குள்ளாகித் தமிழ் நாட்டிலுள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மூன்று முகாம்களுக்குள் அகதியாக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு வான் மூலம் உடைகளைக் கொண்டு சென்று கொண்டிருந்தோம். இவ்வுடைகள் அனைத்தும் சென்னையிலுள்ள அண்ணாநகர், பெசன்ட் நகர், நந்தனம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களால் எமது அகதிகளுக்கு வழங்கப்பட்டவை. இரண்டு நாட்களாக எவ்வித ஓய்வுறக்கமின்றி; ஒவ்வொரு குடும்பத்தினதும் தேவையை அனுசரித்து இவ்வுடைகளைப் பிரித்துக் கட்டியிருந்தோம்.

வான் செங்கல்பட்டு மாவட்டத்தை நோக்கி மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. திடீரென ஒரு எதிர்பாராத வளைவு! வான் தடம்புரளுவது போன்ற ஒரு நிலை. தலை கீழாகப் புரண்டுவிட்டது என்று ஏங்கிவிட்டோம். அந்தளவுக்கு உடுப்புப்பொதிகளின் பாரத்தைச் சுமக்க முடியாமல் வான் சென்றதை நாம் அறிவோம். அதிர்ஷ்டவசமாகச் சாரதி தனது திறமையையும், விவேகத்தையும் பாவித்து வாகனத்தைச் சரியவிடாது காப்பாற்றினார். நாங்கள் உயிர் தப்பினோம்; சந்தோஷம் ஒருபுறம். தமிழின ஒழிப்புக்கெதிராகவும், எமது சுதந்திரத்திற்காகவும் போராடும் தமிழன் ஒருவனின் உயிர் வீணாகப் போவதை நாங்கள் விரும்புவதில்லை.

அகதிகள் முகாம்களை நோக்கி நாங்கள் உடைகளைக் கொண்டு வருகிறோம் என்ற தகவலை ஏற்கனவே அகதிகள் முகாம்களுக்குத் தெரிவித்திருந்தோம். அன்று பிற்பகல் 1.30 மணியளவில் கடலூர்க் குப்பத்தில் அமைந்துள்ள முகாமைச் சென்றடைந்தோம். அகதிகளாக்கப்பட்ட அந்த ஜீவன்கள் எம்மை ஆவலுடன் வரவேற்றனர். அவர்களது வாடி வதங்கிய உடல்களையும், கவலை தோய்ந்த முகங்களையும் கண்டபோது எங்களை மீறிய துக்கம் எம் நெஞ்சங்களில் பீறிட்டுக் கொண்டிருந்தது. வெறி அரசிற்கும், முதலாளித்துவத்திற்கும் உழைத்து ஒட்டாண்டியான ஜீவன்களுக்கா இந்தக் கதி!

இருபகுதியும் எமது துயரங்களை ஆற்றிக் கொண்டு நெருங்கிச் சென்றோம். அந்தக் கஷ்டத்திற்கும் மத்தியில் சென்னையிலுள்ள அகதிகளாகிய எங்களை அன்போடு வரவேற்றார்கள் அந்த மக்கள். எங்கள் களையைப் போக்க தேனீர் வழங்கினார்கள். ஆயிரம் கஷ்டங்களுக்கு மத்தியில் அந்த



இதயங்கள் எங்களுக்குக் காட்டிய அன்புக்கு முன்னால் இந்த அகிலத்தையே புரட்டி வைத்தால் என்ன என்ற வீரமும் ஆவேசமும் ஏற்பட்டன எமக்கு!



இதன்பின்பு சிறிது நேர உரையாடல். ஒரு பெரியவர் கூறினார். 'இந்த இயக்கங்களால் தானே (விடுதலை அமைப்புக்கள்) மன்னாரிலிருந்து வீடு வாசல்களையும், சொத்து சுகங்களையும் இழந்து இந்தியாவிற்கு அகதிகளாக வரவேண்டி வந்தது'' அந்தக் கேள்வியில் நிறைய அர்த்தங்கள் இருந்ததை நாம் ஒப்புக்கொண்டோம், 'பெரியவரே இவ்வளவு சம்பவங்களுக்கும் காரணம்— மக்களைப் பற்றிச் சிந்திக்காமலும் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்காமலும்—பொறுப்பற்ற முறையில் சிறுசிறு தாக்குதல்களைச் செய்துவிட்டு ஓடி ஒளிக்கும் ஒருசில இயக்கங்கள் தான்! மரணத்தின் விளிம்பில் தமிழினத்தைக் கொண்டுவந்ததற்குரிய பொறுப்பை, இந்த இயக்கங்களும் இலங்கை அரசும்தான் ஏற்க வேண்டும். இந்த விளைவுகளுக்கெல்லாம் இந்த இயக்கங்கள் உங்களுக்குப் பதில்சொல்ல வேண்டிய நாள் மிக விரைவில் வரும். இந்த வகையாகச் செயற்படும் இயக்கங்களை மாணவர்களாகிய நாங்கள் வெறுக்கிறோம். இலங்கை வாழ் தமிழ் மக்கள் இவ்வியக்கங்களை இனம் கண்டு செயற்படாத வரைக்கும் எங்களுக்கு விடிவு கிடையாது' எனக் கூறினோம். கொண்டு சென்ற துணிகளில் ஒருபகுதியை அவர்களுக்கு வழங்கிவிட்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு வடபட்டினம் என்ற இடத்திலுள்ள அகதிமுகாமை நோக்கிப் புறப்பட்டோம்.

நமது பயணத்தின் இடைநடுவில் வணக்கத்திற்குரிய ஒரு கன்னியாஸ்திரி ஒருவரும் சேர்ந்து கொண்டார். அவரது பயணம் பரமக்குளம் வரை! இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு சேவை செய்து கொண்டிருக்

www.tamilarangam.net



ஏசட்டும், எதிர்க்கட்டும், பழிபேசட்டும், பகைகொட்டட்டும், ஆர்ப்பரிக்கட்டும் எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்யட்டும், பரவாயில்லை. அவைகளிலிருந்து தப்பிப்பிழைத்தால்தான் விடுதலை இயக்கம் என்பதற்கே மாண்பு ஏற்படும். ஏளனமும் எதிர்ப்பும் அழிந்துவிடுமாயின் உண்மையான விடுதலை உணர்வு உண்டாகவில்லை என்று பொருள். எனவே, நமது விடுதலை உணர்வுக்கு எத்துணை வலிவு இருக்கிறது என்பதே அதனிடம் காணப்படும் தாங்கிக் கொள்ளும் சக்தியின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.

C. N. அண்ணாத்துரை

கிறார் என்பதை எம்மிடையே நடந்த உரையாடலின்போது அவர் தெரிவித்தார். அவர் மிகுந்த அனுதாபத்தோடு இலங்கை இனப்படுகொலைகள் பற்றியும், அங்குள்ள தமிழர்கள் படும் இன்னல்கள் பற்றியும் எம்மிடம் இருந்து அறிந்து கொண்டார். உரையாடல் முடிவடையவும், வடபட்டினம் வந்தடையவும்—சரியாக இருந்தது.

வடபட்டினம் முகாமிலும் அதே கவலை தோய்ந்த முகங்கள்! செயலிழந்த உடல்கள். இருப்பினும் புன்னகையுடன் கூடிய வரவேற்பு எமக்கு. உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டோம். அந்த முகாமுக்குரிய உடைகளை அங்குள்ளவர்களுக்கு கையளித்துவிட்டு அங்கிருந்து பரமங்கேணியிலுள்ள முகாமை நோக்கி எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

பரமங்கேணி முகாம் வந்துவிட்டது. துயரங்களால் துவண்டபோதும் இந்திய மண்ணில் இருந்து கொண்டே தமது சகோதரத்துவத்தையும், பாசத்தையும் வெளிப்படுத்தி எம்மை வரவேற்க முன்னின்றனர். உலகஜனத் தொகையில் பெருமளவில் இருந்தும் சொந்த நாட்டில் சிறுபான்மையான அந்தத் தமிழ் நெஞ்சங்கள் ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு அவர்களுடன் மனம் விட்டுப் பேசினோம். அவர்களில் ஒரு இளைஞர் கேட்டார். 'ஜெயவர்த்தனா ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் தமிழர்களைப் படுகொலைச் செய்து கொண்டிருக்கும்போது எமது இயக்கங்கள் பார்த்துக் கொண்டிருப்பது ஏன்?' என்று 'படுகொலைகள் சொத்தழிப்புகள், கற்பழிப்புகள் போன்றவற்றைச் செய்வதன் மூலம் இயக்கங்களை ஆத்திரமடையச் செய்து— இயக்கங்கள் முற்று முழுதாகத் தங்களைத் தயார்ப்படுத்தாத நிலையில்— போராடத் தூண்டி அவற்றை அழித்துவிடுவதுதான் ஜெயவர்த்தனாவின் திட்டமாகும். ஜெயவர்த்தனாவின் இத்தகைய சதி வலைக்குள் விழுந்து விடாமல் தந்திரோபாயத்தைக் கையாண்டு செயல்படுவதன் மூலம்தான் தமிழீழத்தைப் பெறமுடியும் எனக்கூறி எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். இதனைத் தொடர்ந்து பல கேள்விகளுக்கு நாம் பதிலளித்துவிட்டு அவர்களுக்காக கொண்டுவந்த உடைகளை அவர்களிடம் கையளித்தோம். முடிவில் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு மாலை 6.30க்கு சென்னை வந்து சேர்ந்தோம். ●



# கேள்வி? பதில்!

திம்பு பேச்சுவார்த்தைகளில் பின்னடைவு ஏற்படக் காரணம் ஜெயவர்த்தனாவின் முரட்டுப் பிடிவாதமா அல்லது சிங்களக் கட்சிகளினதும், பௌத்த ஸ்தாபனங்களினதும் பயமுறுத்தலா?

கரு. வேழவேந்தன் சென்னை-5.

'பின்னடைவு' எனக்கூறுவதற்கு ஏதாவது முன்னேற்றம் இருந்திருக்க வேண்டுமே. அதை விட்டுவிட்டுப் பார்த்தால் மூன்றும்தான். பின்னையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுவதென்று கேள்விப்பட்டிருக்கின்றீர்களல்லவா, 'பிள்ளை' இப்போது பூதமாகிவிட்டது.

தமிழீழ மண் சிங்கள மக்களால் அபகரிக்கப்படுவது தமிழ்மக்கள் அம்மண்ணை விட்டு இடம் பெயர்வதாலா? அல்லது தமிழ்மக்கள் வன்முறையால் விரட்டியடிக்கப்பட்டா?

என். மாசிலாமணி

—மட்டக்கிளப்பு

1970ம் ஆண்டிற்குப் பிற்பாடிலிருந்து தமிழ் பேசும் மக்கள் பல வழிகளில் தமது பாரம்பரிய மண்ணை இழந்து வருகின்றனர். அரசினது திட்டமிட்ட குடியேற்றங்கள் ஊடாக வவுனியா, திருகோணமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் மண் அபகரிப்புத் தொடர்ந்து வருகின்றது. முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசத்தை அழிப்பதற்காகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு மாவட்டமே அம்பாறையாகும். கல்முனையில் இருந்து சில பகுதிகளைப் பிரித்தெடுத்தும் சிங்கள மாவட்டத்தில் இருந்து சில பகுதிகளை பிரித்தெடுத்தும் இணைக்கப்பட்டதே அம்பாறை. இவ்வாறு இணைப்பதனால் அப்பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் செறிவு படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. 'தீபவாவி' புனித நகர்த்திட்டத்தின் மூலம் முஸ்லிம் மக்களுடைய ஏராளமான பூமி பறிக்கப்பட்டுவிட்டது. இதேமாதிரியொரு திட்டம் வவுனியாவிலும் வரையறுக்கப்பட்டுவிட்டது. சில பிரதேசங்களில் தமிழ்க் கிராமங்களைச் சுற்றிச் சிங்களக் குடியேற்றங்களைப் பூர்த்தியாக்குகிறார்கள். பிற்பாடு வன்முறையைத் தூண்டிவிட்டு தமிழ் பேசும் மக்களை அப்புறப்படுத்துகிறார்கள். இராணுவக் காடைத்தனங்களால் விரட்டியடிக்கிறார்கள். இவ்வாறு காடைத்தனங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலோங்கும்போது பாதுகாப்பற்றுத் தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் தாமாகவே ஏதாவது நிகழலாம் என்று அஞ்சி வெளியேறுகிறார்கள். இது ஒருவகை நிர்ப்பந்தமேயாகும். இதைச் 'சுயமான இடம்பெயர்வு' எனக் கொள்ளலாகாது. ஆக நீங்கள் கேட்ட இரண்டும் கொடூர அரசால் நிகழ்த்தப்படும் ஒரு செயலாகும்.

திருமலையில் மட்டும் திடீரென இவ்வாறு பெரும்இன அழிப்பிற்கு தமிழினம் உட்பட காரணம் என்ன?

மு. அளகேசன்
—திருகோணமலை.

திருமலையில் நிகழும் பெரும் இன அழிப்புகள் இன்று மட்டுமல்ல அடிக்கடி நிகழ்ந்தே வருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே பாரியக் குடியேற்றத் திட்டங்களூடாக தமிழ் பேசும் மக்களின் செறிவு பாரிய அளவில் குறைக்கப்பட்டுவிட்டது. 1981ம் ஆண்டு குடிசன புள்ளிவிவரத்தின் பிரகாரம் அண்ணளவாக இலங்கைத்தமிழர் எண்ணிக்கை 80700 ஆகவும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 70000 ஆகவும் சிங்கள மக்களின் எண்ணிக்கை 80400 ஆக இருப்பதிலிருந்தும் இதைப் புரிந்து கொள்ளலாம். இந்நிலையில் இங்கிருந்து தமிழ்பேசும் மக்களை அப்புறப்படுத்துவது திருகோணமலையை ஒரு சிங்கள மாவட்டமாக்கும் நோக்கத்தை நிறைவு செய்யும். இதில் அரசு வெற்றிபெற்று வருகிறதெனக் கூறலாம். தமிழ் பேசும் மக்களுள் இலங்கைத் தமிழரை முதலில் அப்புறப்படுத்துவது முஸ்லிம் மக்களைத் தனிமைப் படுத்தித் தாக்குதற்கேயாகும்.

ஆனால் இதைவிட முக்கியமான காரணமும் ஒன்றுள்ளது. இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு அதாவது தனது தளங்களை அமைப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் இரு இடங்களில் வெற்று பெற்றுள்ளது. ஒன்று டியோகோகார்சியா, மற்றது பிலிப்பைன். இங்கு பறிகொடுத்த டியோகோசியாவை மீண்டும் திருப்பிப் பெறுவதற்கு மொறிசீயஸ் நாடு தன்னாலான முயற்சிகளைத் தொடுத்துவருகிறது. வீரம் செறிந்த பிலிப்பைன் மக்களது போராட்டம் சீனாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஓடஓட விரட்டும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

இப்படியான தனது இழப்புகளை ஈடுகட்டுவதற்கும், மேலும் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் மிகச்சிறந்த இராணுவக்கேந்திரத் தளமான திருகோணமலையைத் தனதாக்கிக் கொள்ளும் நோக்கத்தில் வெற்றி காணத் தொடங்கிவிட்டது.

ஆனால் இத்திருகோணமலை எவ்வித போர்க்கோஷங்களும் அற்ற 'அமைதியான' பூமியாக இருப்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விருப்பமாகும். இவ் அமைதிக்கு தமிழ் பேசும் மக்களின் போராட்டம் மிக ஆபத்தானது என்பதைப் புரிந்து கொண்ட அமெரிக்காவின் ஆலோசனையின் பேரிலேயே அதன் ஏவல் நாய்களை ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசு தனது முப்படைகளுக்கு உத்தரவு வழங்கியும் திடீர் 'பெரும் இன அழிவுகளை ஏற்படுத்தி சிங்களக்காடையர்களுக்கு ஆயுதம் வழங்கியும் தமிழ் பேசும் மக்களை விரட்டுகிறது.

பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் போராட்ட அமைப்புகள் கலந்து கொள்வதுபற்றி தங்களது தற்போதைய கருத்து யாது?

எம். சிவராசா —காத்தான்குடி

சிறீலங்கா இனவெறி அரசு தமிழீழ மக்களைக் கொன்று குவிப்பதானாலும், அடிப்படை உரிமைகள் நசுக்கி வருவதாலும் சர்வதேச அரங்கிலே செல்வாக்கிழந்து வருகிறது. உலக நாடுகளில் சிறீலங்காவை அடகு வைப்பதன் மூலம் தனது வயிற்றை வளர்த்துக் கொள்கின்ற இப்பாசிச அரசிற்குக் கடன் உதவிகளை வழங்கிடவும், பொருளாதார ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் அந்நிய நாடுகள் இன்று பின்வாங்குகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகவும், இதற்குப் பயங்கரவாதிகள் இடையூறாக இருப்பதாகவும், உலக அரங்கிலே தீவிர பிரச்சாரம் செய்து வருகிறது இந்த இனவெறி அரசு.

தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்புகள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதன்மூலம் — 'நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல' (சிறீலங்கா அரசு எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கருதித்தானே) எமது அடிப்படை உரிமைகளுக்காகவே போராடுகிறோம் என்பதைக் காட்ட முடியும்.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் பேச்சுவார்த்தைகள் கறைபடிந்த அம்சங்களே!

எமது அடிப்படை உரிமைகளை ஜெயவர்த்தனா அரசினால்த் தீர்ந்துவிட முடியாதென்பதும் நாம் அறிந்த உண்மையே!

இப்பேச்சு வார்த்தைகளில் நாம் கலந்து கொள்ளவில்லையென்றோ அல்லது இது எம்மால் குழப்பப்பட்டதென்றோ அமைந்துவிடாது, இது எம்மால் தகுந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

இப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதால் ஜெயவர்த்தனா அரசினால் எமது அடிப்படைப் பிரச்சனைகளை ஒருபோதும் தீர்த்துமுடியாதென்பதையும், நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கவே ஆயுதம் ஏந்துகிறோம் என்பதையும் உலக அரங்கிற்கு எடுத்துக் காட்டுவதன்மூலம், ஜெயவர்த்தனாவின் முகத்திரையைக் கிழித்தெறிய முடியும்.

நாம் இதை தந்திரோபாயத்துடன் எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. மாறாக உணர்ச்சி வசப்படுவதனாலோ, ஓடி ஒழிவதினாலோ எமது பிரச்சனையைத் தீர்த்துவிட முடியாது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






1—9—85

இலங்கைச் சிறையில் அடைத்து வைத்துள்ள தமிழர்களை விடுதலை செய்யக்கோரி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்ந்து 25வது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் 19 பேர் களைப்படைந்த நிலையில் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதே சமயம் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடைபெற்றுள்ளன. யாழ். நகரிலும் வேறுபல கிராமங்களிலும் வாழும் தமிழ் மக்களும் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

2—9—85

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான வி. தர்மலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆலாலசுந்தரம் அவர்களின் உடல் 2—9—85 அதிகாலை 5-30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து 200 யார் தொலைவில் கண்டெடுக்கப்பட்டது. தர்மலிங்கம் அவர்களின் உடல் தாவடியிலுள்ள மயானத்தில் கண்டெடுக்கப்பட்டது. திரு. ஆலாலசுந்தரத்தின் கைகளிலும், மார்பிலும் குண்டுகள் துளைத்திருந்தன. திரு. தர்மலிங்கத்தின் தலையை குண்டுகள் துளைத்திலிருந்தன.

3—9—35

தமிழீழ முன்னாள் எம்.பிக்கள் கொலை குறித்து இந்தியா பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும், இத்தகைய சம்பவங்கள் இனப்பிரச்சனைத் தீர்வைப் பின்தள்ளும் என இந்திய வெளியுறவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

※ ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதலின்பின் காலை 3 மணியளவில் ஏறாவூர் பகுதிக்கு 15 கவச வண்டிகளில் வந்த இராணுவத்தினரும் பொலிஸ் அதிரடிப் படையினரும் அவர்களது அட்டகாசத்தால் தப்பியோடிய 45 தமிழர்களைக் கைதுசெய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளதோடு ஏறாவூர் பகுதியிலுள்ள பல வீடுகளுள் புகுந்து பெருமளவு பொருட்களைக் கொள்ளையடித்ததுடன் இரு தமிழ்ப் பெண்களையும் முகாமிற்கு கடத்திச் சென்றுள்ளனர்.

4—9—85

யாழ்ப்பாணம் பகுதியில் முன்னாள் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்கள் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக முழுக்கடைகளும் மூடப்பட்டு, காரியாலயங்கள் செயல்படமுடியாத நிலையில் வாகனப் போக்குவரத்துகள் அன்று சோபையிழந்து காணப்பட்டது.

※ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரது கொலைக்கு ஈழதேசிய விடுதலை முன்னணியின் (ENLF) ஏதாவது ஒரு குழுவே காரணம் என்று குற்றம் சாட்டி அதை வன்மையாகக் கண்டித்துள்ளது.

5—9—85

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரின் இறுதிச் சடங்கு நடைபெற்றபோது பெரும் தொகையான மக்கள் பங்கெடுத்துக் கொண்டதுடன் சிலர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் எதிராக கோசம் எழுப்பியதாக தெரிகிறது. இக்கொலைகளைத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய அரசு என்பன கண்டித்துள்ளன.

※ பன்குளத்தில் உள்ள ஒலுக்குளம், கல்லடி ஆகிய பகுதிகளில் உள்ள சிங்களவர்கள் ஊர்காவல் படை என்ற பெயரில் இராணுவத்துடன் சேர்ந்து செட்டிக்குளம் மற்றும் ஏனைய பகுதி மக்களையும் துன்புறுத்தி வருகின்றன.

6—9—85

வவுனியாவில் இராணுவத்தால் தாக்கப்பட்ட கிராமங்கள் பின்வருமாறு :

செட்டிக்குளம், திக்காரன் குளம், பாவற்குளம், 10ம்யுனிற், சின்னக்குளம், கரம்பக்காடு, அடப்பங்குளம், பெரியநொச்சிக்குளம், சின்னத்தம்பனை, மதகுவைத்தகுளம், முகத்தான்குளம், முட்டையிட்டகுளம், நெடுங்கரைச்சேனை, முதலியாகுளம், இலுப்பைக்குளம், வீரபுரம், வேப்பங்குளம், பெரியகுளம், பீடாரிக்குளம், புளியங்குளம், 9ம்யுனிற், நாவற்குளம், நேரியகுளம், கணேசபுரம், அழகாபுரி என்பனவாகும்.

※ ஈரப் பெரிய குளத்திற்கு அருகில் கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த தனியார் மினி பஸ் சிங்களக் குண்டர்களினால் வழிமறிக்கப்பட்டு அதில்பயணம் செய்த தமிழ் மக்களைக் கம்பிகளால் தாக்கி வாளால் வெட்டியுள்ளார்கள். இதில் சாரதியுட்பட 6பேர் படுகாயங்களுடன் யாழ். வந்துள்ளார்கள். இவர்களது பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

6—9—85

யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் எம்பிக்கள் கொலைக்குக் கண்டனம் தெரிவித்துத் துண்டு பிரசுரங்களும் வெளியிட்டுள்ளனர். இக்கொலைகளை ஏதாவதொரு இயக்கம் செய்திருக்குமாயின் அது போராட்டத்திற்குக் குந்தகத்தை ஏற்படுத்தும் என்றும் இக்கொலையைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு 5 இயக்கங்களைச் சாருமென்றும் இதிலிருந்து எந்த இயக்கமும் ஒதுங்கி நிற்க முடியாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7—9—85

இரவு நல்லூரிலுள்ள சிவபாக்கியம் ஸ்ரோர்சில் இளைஞர் கோஷ்டி ஒன்று இரண்டரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லட்சம் பெறுமதியான பொருட்களையும், நகைகளையும் கொள்ளையடித்துள்ளது.

8—9—85

வவுனியா தச்சன்குளம் பகுதியிலுள்ள விமானத்தளம் மேலும் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைச் சுவீகரிக்க விஸ்தரிக்கப்பட்டதுடன் பல பந்தோபஸ்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. பல நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இச் சுவீகரிப்பினால் தமது வீடு வாசல்களைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

9—9—85

தொடர்ந்து 31வது நாளாக வெலிக்கடைச் சிறையில் தமிழ்ப் போராளிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர். அதேநேரம் அவர்களுக்கு ஆதரவாக தமிழீழ மக்கள் பெருவாரியாக திரண்டு கொண்டுள்ளனர்.

10—9—85

இதுவரை திருகோணமலையில் 10 இந்துக் கோயில்கள் ஆயுதம் ஏந்திய சிங்களக் காடையர்களினால் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் 100ற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

11—9—85

இலங்கையிலுள்ள பல அகதிகள் முகாம்களில் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். கடந்த ஒரு வாரமாக உணவுப் பொருட்கள் முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்படவில்லையெனத் தெரிகிறது.

12—9—85

திருகோணமலையிலுள்ள தமிழ் அகதிகளில் 1500 பேர் மீண்டும் இராணுவ அட்டகாசங்களினால் மட்டக்களப்பு முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

13—9—85

முருகண்டிக்கு அருகில் பஸ்சில் சிவில் உடையில் பிரயாணம் செய்த பொலிசார் பின்னால் வந்த வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சாரதி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார். ஏனைய மூவர் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14—9—85

இலங்கையில் போர் நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்த காலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி வருத்தமும், கவலையும் தெரிவித்துள்ளார்.

15—9—85

யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் இராணுவம் வீதியால் நடந்து சென்ற மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது சுந்தரலிங்கம் (35) என்பவரும் வேறு இருவரும் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

16—9—85

யாழ். குடாநாட்டில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும் ஆசிரியைகளும் சிறீலங்கா அரசின் கெடுபிடிகளை ஆட்சேபித்து 4 மைல் தூரத்திற்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தி வடமாகாணக் கல்விப்



பணிப்பாளரிடம் தமது கோரிக்கைகளைச் சென்று கையளித்துள்ளார்கள்.

17—9—85

இலங்கையில் சண்டை நிறுத்தத்தை மேற்பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையோ அல்லது வேறு எந்த அமைப்பையோ அனுப்பி வைக்குமாறு ஈழத் தேசிய விடுதலை முன்னணியினர் இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளனர். ஆனால் இதற்கு சிறீலங்கா அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

18-09-85

வேலணையிலுள்ள நிறைவேற்றும் பொறியியலாளர் திணைக்களத்தில் புகுந்த ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஸ்டியொன்று அங்கு காவலர்களைப் பயமுறுத்திவிட்டு றோனியோ இயந்திரம், மணிக்கூடு, மின்விசிறி, தராசு போன்றவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

19-09-85

தனுஸ்கோடி அருகே மீன் பிடிக்கச் சென்ற ஜோசப் என்பவர் மீது பி. 16 என்ற படகில் வந்த சிறீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், அவரை தலைமன்னாருக்குக் கடத்திச் சென்றுள்ளனர் என இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர் கே. போஸ் தெரிவித்துள்ளார்.

20-09-85

யாழ். கோட்டையிலிருந்து வெளியே வந்த ஆயுதப்படையினர்மீது இளைஞர் கோஸ்டியொன்று இருகைக்குண்டுகளை வீசியதாகவும், இதைத் தொடர்ந்து யாழ்நகரில் பெரும் பதட்டம் ஏற்பட்டு கடைகள் முழுவதும் மூடப்பட்டதாகவும் குண்டுவீச்சின்போது யாரும் காயமடையவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

※ மன்னார் மாவட்டத்தில் கள்ளிக்குளம் பகுதியில் வெள்ளையர் (வயது 22) அவரது மனைவி முத்து (16) ஆகியோர் சிங்களக் காடையர்களினால் ஊர்காவற்படையினர் என்ற பெயரில் வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

22-09-85

இலங்கையில் இராணுவத்திற்கான செலவு நாளுக்கு நாள் அதிகரிப்பதனால் அடுத்த ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் பெருமளவு வீழ்ச்சியுறும் என்று சண்டே ஒப்சேவர், வீக்எண்ட் என்ற பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அப்பத்திரிகைகளில் மேலும் இது பற்றிக் குறிப்பிடுகையில் இலங்கையில் இராணுவத்திற்கான செலவு நாளுக்கு நாள் அதிகரித்துவரும் அதே நேரம் தேயிலைமூலம் கிடைக்கும் ஏற்றுமதி வருமானம் நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது. அதாவது ராணுவச் செலவு 10மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் 500 கோடி ரூபாவிலிருந்து 250 கோடி ரூபாவாகக் குறைந்துவிட்டது. எனவே மொத்தப்பற்றாக்குறை 2885

www.tamilarangam.net



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற பெயரில் தங்களைக் குறிப்பிட்டு பல நாட்களாக தொடர்ச்சியாக பல கொள்ளைகள் நடத்தியதாகக் கூறப்படும் ஒரு குழுவினரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இனம் கண்டதுடன் கொள்ளைப் பொருட்களையும் மீட்டுள்ளது. சில பொருட்கள் வள்ளமொன்றில் ஏற்பட்டபோது மீட்கப்பட்டுள்ளது. இயக்கங்களின் பெயர்களைப் பயன்படுத்திக்கொள்ளைகளை நடத்துபவர்கள் பற்றிய விபரங்களைத் தந்துதவுமாறும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. மீட்கப்பட்ட பொருட்களின் சொந்தக்காரர்களைத் தகுந்த அத்தாட்சிகளுடன் உரிய பொறுப்பாளர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிவித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொ.செல்வராசா குடும்பத்தினர் தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் பெயரால் களவாடப்பட்ட ரீ.வி. டெக்ஐ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரிடம் பெற்றுக் கொண்டு தங்களது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளது.

**23-09-85**

கடந்த 5 நாட்களில் ராமேஸ்வரத்துக்கு 87 தமிழ் மக்கள் அகதிகளாக வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்துள்ளனர்.

**24-09-85**

ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் முழுக் கடையடைப்பும், 12 மணிநேர உண்ணாவிரதமும் நடைபெற்றது. சென்னையில் மட்டும் 165இடங்கள் உட்பட 2714 இடங்களில் (தமிழ்நாடு முழுவதும்) 1இலட்சத்து 44 ஆயிரம் பேர் உண்ணாவிரதம் இருந்தனர். திருவாரூரில் 57 வயதான எஸ்.பி. முத்து என்பவர் இலங்கைத் தமிழர்கள் வாழ்க என கோசமிட்டபடி தனக்குத்தானே தீ மூட்டினார். அவர் தற்போது ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ளதாக தெரியவந்துள்ளது.

**25-09-85**

இலங்கையில் முதன் முறையாக சிறைச்சாலையில் அடைத்துவைத்துள்ள இளைஞர்களைப் பார்வையிட 15 பெற்றோர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

---


**மாந்தர் பதிப்பகத்தின்**

**மற்றுமோர் புரட்சிச் சித்திரம்**

**உரத்தநாடு சங்கரலிங்கம்**

**எழுதிய**

**தமிழீழத்துப்**

# புரட்சிமுகவரிகள்

**அக்டோபர் வெளியீடு.**

வெளியீடு:

**மாந்தர் பதிப்பகம்**

**எச்-16 சி, கொரட்டூர்,**

**சென்னை-80.**

R. N. 42574/84 Regd. No. TN/MS

http ://www. thamizham. net

பொங்கும்

# தமிழமுது

தமிழ் ஈழ மாணவர் பேரவை

"உலகத்திலே தமிழனுக்கு என்று ஒரு நாடு வேண்டும் என்பதற்காகவோ, ஏதோ போராடவேண்டும் என்பதற்காகவோ அனாவசியமாக ஒரு நாட்டைத் துண்டாட வேண்டும் என்பதற்காகவோ தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடவில்லை... இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டுமென்றால் தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு ஒன்றை நிறுவுவதன் மூலம்தான் சாத்தியமாகும் என்று முடிவெடுத்த பின்தான், அதற்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தோம்."

— தோழர் உமாமகேஸ்வரன்

நூல் அஞ்சல்

பெறுநர்:

அனுப்புவோர்:

தமிழ்ழ மாணவர் பேரவை
28, சி. என். கே. சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

வெளியிடுபவர் : இரா. கபிலன், 25, ஜெயராம செட்டித் தெரு, சென்னை-600 105
அச்சிடுபவர் : பாவாணர் அச்சகம், 116, கலவைச் செட்டித் தெரு, சென்னை-600 002.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்